TEST 1

# UNIT III : HISTORY & INM

## மக்களின் புரட்சி

(Ref : 8th History)

### கற்றலின் நோக்கங்கள்

- தமிழ்நாட்டில் பாளையக்காரர் முறை பற்றி அறிதல்
- ஆங்கிலேயர்களுக்கெதிராக நடைபெற்ற புரட்சியில் பூலித்தேவர் மற்றும் கட்டபொம்மனின் பங்கினைப் பற்றி புரிந்துகொள்ளுதல்
- தென்னிந்திய புரட்சி பற்றி தெரிந்துகொள்ளுதல்
- வேலூர் புரட்சியின் காரணங்கள் மற்றும் விளைவுகளைப் பற்றி அறிதல்
- 1857ஆம் ஆண்டு புரட்சியின் காரணங்கள் மற்றும் விளைவுகளைப் புரிந்துகொள்ளுதல்

### அறிமுகம்

1757ஆம் ஆண்டு பிளாசிப் போருக்குப் பின் நாட்டின் அரசியல், சமூக–பொருளாதார நிலையைப் பாதிக்கும் வகையில் ஆங்கிலேயரால் நாட்டின் பல பகுதிகளில் அரசியல் மற்றும் பொருளாதார ஆதிக்கம் ஏற்படுத்தப்பட்டது. இது பல திறன்மிக்க நிலக்கிழார்கள் மற்றும் தலைவர்களிடையே அதிகார வேறுபாட்டிற்கு வழிகோலியது. இயற்கையாகவே அவர்களுள் பலர் ஆங்கிலேயர்களுக்கு எதிராக புரட்சியில் ஈடுபட்டனர். ஆங்கிலேயர்கள் பாளையக்காரர்களிடமிருந்து வருடாந்திர கப்பம் வசூலிக்கும் உரிமை பெற்றிருந்ததாகக் கருதப்படுகிறது. ஆங்கிலேயர்களுக்கு முதல் எதிர்ப்பு பூலித்தேவரால் ஏற்பட்டது. அவருக்குப்பின் மற்ற பாளையக்காரர்களான வீரபாண்டிய கட்டபொம்மன், ஊமைத்துரை, மருது சகோதரர்கள் மற்றும் தீரன் சின்னமலை ஆகியோரும் ஆங்கிலேயருக்கெதிரான எதிர்ப்பினைத் தெரிவித்தனர்.

### பாளையங்களின் தோற்றம்

விஜய நகர ஆட்சியாளர்கள் தங்கள் மாகாணங்களில் நாயக்கர்களை நியமித்தனர். இதையொட்டி மதுரை நாயக்கர் பாளையக்காரரை நியமித்தார். 1529இல் விஸ்வநாதர் மதுரை நாயக்கரானார். இவரால் தனது மாகாணங்களில் அதிகாரங்களைப் பெற விரும்பிய சிறுகுடித் தலைவர்களை கட்டுப்படுத்த முடியவில்லை. அதனால் அவரது அமைச்சர் அரியநாதருடன் கலந்தாலோசித்து 1529இல் பாளையக்காரர் முறையை ஏற்படுத்தினார். அதன்மூலம் நாடு 72 பாளையங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பாளையமும் ஒரு பாளையக்காரரின் கீழ் கொண்டுவரப்பட்டது. ஒவ்வொரு பாளையக்காரரும் ஒரு பிரதேசத்தின் அல்லது பாளையத்தின் உரிமையாளராக கருதப்பட்டார். இந்த பாளையக்காரர்கள், நாயக்கர்களுக்கு தேவை ஏற்படும் போது இராணுவம் மற்றும் இதர உதவிகளை முழு மனதுடன் செய்தனர். பாளையக்காரர்கள் வரிகளை வசூலித்து, தாங்கள் வசூலித்த வரிப்பணத்தில் மூன்றில் ஒரு பங்கினை மதுரை நாயக்கர்களுக்கும், அடுத்த மூன்றில் ஒரு பங்கினை இராணுவ செலவிற்கும் கொடுத்துவிட்டு மீதியை அவர்கள் சொந்த செலவிற்கு வைத்துக்கொண்டனர்.

## புரட்சியாளர்களின் கூட்டமைப்பு (1799 - 1800)



## தென்னிந்தியாவில் தொடக்ககால புரட்சிகள்

### பாளையக்காரர்களின் புரட்சி

17 மற்றும் 18ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டின் அரசியலில் பாளையக்காரர்கள் முக்கிய பங்கு வகித்தனர். அவர்கள் தங்களை சுதந்திரமானவர்களாகக் கருதிக்கொண்டனர். பாளையக்காரர்களிடையே இரண்டு பாளையங்கள் (முகாம்கள்) இருந்தன. அவை கிழக்கு பாளையம் (முகாம்), மேற்கு பாளையம் (முகாம்) என்பன ஆகும். கிழக்கு பாளையங்களில் இருந்த நாயக்கர்கள் கட்டபொம்மனின் கட்டுப்பாட்டின் கீழ் ஆட்சி செய்தனர். மேற்கு பாளையங்களில் இருந்த மறவர்கள் பூலித்தேவரின் கட்டுப்பாட்டின் கீழ் ஆட்சி செய்தனர். இந்த இரண்டு பாளையக்காரர்களும் ஆங்கிலேயருக்கு கப்பம்(kist) கட்ட மறுத்துக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

பாளையக்காரர்களுக்கும், கிழக்கிந்திய கம்பெனிக்குமிடையே ஆரம்ப கால போராட்டங்கள் அரசியலில் ஒரு வலிமையான பரிணாமத்தைப் பெற்றன. 1792ஆம் ஆண்டு கர்நாடக உடன்படிக்கையால் ஒருங்கிணைக்கப்பட்ட ஆங்கிலேய அதிகாரம் பாளையக்காரர்களின் மீது செலுத்தப்பட்டது. இந்த உடன்படிக்கையின் படி ஆங்கிலேயர்கள் வரிவசூல் செய்யும் உரிமையையும் பெற்றனர். அதன் விளைவாக பாளையக்காரர்களின் புரட்சி வெடித்தது.

### பூலித்தேவர்

இந்தியாவில் ஆங்கில ஆட்சியை எதிர்ப்பதில் தமிழ்நாட்டில் முன்னோடியாக இருந்தவர் பூலித்தேவர் ஆவார். அவர் திருநெல்வேலியின் அருகிலிருந்த நெற்கட்டும் செவல் என்ற பாளையத்தின் பாளையக்காரர் ஆவார். அவரது ஆட்சிக் காலத்தில் ஆற்காட்டு நவாபான முகமது அலிக்கும் ஆங்கிலேயருக்கும் கப்பம் கட்ட மறுத்து அவர்களை எதிர்க்கத் தொடங்கினார். எனவே ஆற்காட்டு நவாப் மற்றும் ஆங்கிலேயரின் கூட்டுப்படைகள் பூலித்தேவரைத் தாக்கின. ஆனால் அக்கூட்டுப் படைகள், திருநெல்வேலியில் பூலித்தேவரால் தோற்கடிக்கப்பட்டன. இந்தியாவில், ஆங்கிலேயருடன் போரிட்டு அவர்களைத் தோற்கடித்த முதல் இந்திய மன்னர் பூலித்தேவரே ஆவார். இந்த வெற்றிக்குப் பிறகு பூலித்தேவர் நவாப் மற்றும் ஆங்கிலேயரை எதிர்க்க பாளையக்காரர்களின் கூட்டமைப்பை உருவாக்க முயன்றார்.

1759இல் யூசுப்கான் தலைமையிலான ஆற்காடு நவாப்பின் படைகள் நெற்கட்டும் செவலைத் தாக்கின. அந்தநல்லூரில் பூலித்தேவர் தோற்கடிக்கப்பட்டார். 1761இல் ஆற்காடு நவாப்பின் படைகள் நெற்கட்டும்செவ்வலைக் கைப்பற்றியது. பூலித்தேவர் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து 1764இல் நெற்கட்டும் செவ்வலைக் மீண்டும் கைப்பற்றினார். பிறகு அவர் 1767இல் கேப்டன் கேம்பெல் என்பவரால் தோற்கடிக்கப்பட்டார். பின்னாளில் பூலித்தேவர் தப்பித்து தலைமறைவாக வாழ்ந்து, தனது நோக்கம் நிறைவேறாமலேயே இறந்து போனார். இருந்தாலும் விடுதலைக்கான அவரது துணிச்சலான போராட்டம் தென்னிந்திய வரலாற்றில் நிலைத்து நிற்கிறது.

### வீரபாண்டிய கட்டபொம்மன்


வீரபாண்டிய கட்டபொம்மன்

பாண்டியர்களின் கீழ் நிலமானிய அடிப்படையில் பாஞ்சாலங்குறிச்சியைத் தலைநகராகக் கொண்டு ஜெகவீரபாண்டியகட்டபொம்மன், வீரபாண்டியபுரத்தை ஆட்சி செய்தார்.பின்னர் நாயக்கர்களின் ஆட்சியில் பாளையக்காரரானார். ஜெகவீர பாண்டியனுக்குப்பின் அவரதுமகன் வீரபாண்டிய கட்டபொம்மன் பாளையக்காரரானார். அவரது மனைவி ஜக்கம்மாள், சகோதரர்கள் ஊமைத்துரை மற்றும் செவத்தையா ஆவர்.

### ஆற்காடு நவாப்

விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சிக்குபின் முகலாயர்கள் தெற்கில் தங்கள் மேலாண்மையை நிறுவினர். கர்நாடகாவில் நவாப் முகலாயர்களின் பிரதிநிதியாக செயல்பட்டார். பாஞ்சாலங்குறிச்சி பாளையமும் நவாப்பின் ஆளுகையின் கீழ் கொண்டுவரப்பட்டது. எனவே அது, நவாப்பிற்கு கப்பம் (வரி) கட்ட பணிக்கப்பட்டது. ஆனால் 1792இல் ஏற்பட்ட கர்நாடக உடன்படிக்கை அரசியல் நிலைமைகளை முற்றிலும் மாற்றியது.

கம்பெனி, பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து வரி வசூல் செய்யும் உரிமையையும் பெற்றது. கப்பம் வசூலித்ததே கட்டபொம்மனுக்கும், ஆங்கிலேயருக்குமிடையேயான மோதலுக்கான முதன்மை காரணமானது.

### கட்டபொம்மன்–ஜாக்சன் சந்திப்பு

இராமநாதபுர கலெக்டர் காலின் ஜாக்சன் 1798இல் நிலுவைத் தொகையை செலுத்தச் சொல்லி கட்டபொம்மனுக்கு கடிதங்கள் எழுதினார். கட்டபொம்மனும் நாட்டின் பஞ்சத்தின் காரணமாக நிலுவையைச் செலுத்தும் சூழ்நிலையில் தான் இல்லை என்று பதில் எழுதினார். எனவே கோபமடைந்த ஜாக்சன் கட்டபொம்மனைத் தண்டிக்க ஒரு படையை அனுப்ப முடிவு செய்தார். இருப்பினும் சென்னை அரசாங்கம், கட்டபொம்மனுக்கு அழைப்பு அனுப்பி இராமநாதபுரத்தில் ஒரு கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யும் படி கலெக்டருக்கு வழிகாட்டியது.

1798இல் கட்டபொம்மன் தனது அமைச்சர் சிவசுப்பிரமணியத்துடன் இராமநாதபுரத்தில் கலெக்டரை சந்தித்தார். 1080 பகோடா பாக்கியை தவிர பெரும்பாலான வரியை கட்டபொம்மன் செலுத்திவிட்டதை கணக்குகள் சரிபார்த்தலுக்குப் பின் அறிந்த ஜாக்சன் சமாதானமடைந்தார். இந்த சந்திப்பின் பொழுது கட்டபொம்மனும் அவரது அமைச்சர் சிவசுப்பிரமணியமும் ஜாக்சனின் முன் மூன்று மணி நேரம் நிற்கவைக்கப்பட்டனர். கலெக்டர், கட்டபொம்மனையும், அவரது அமைச்சரையும் அவமானப்படுத்தி கைது செய்ய முயற்சி செய்தார். கட்டபொம்மன் தனது அமைச்சருடன் தப்பிக்க முயன்றார். உடனே ஊமைத்துரை, தனது வீரர்களுடன் கோட்டைக்குள் நுழைந்து கட்டபொம்மன் தப்பிக்க உதவிசெய்தார். ஆனால் துரதிஷ்டவசமாக சிவசுப்பிரமணியம் கைது செய்யப்பட்டார்.

### எட்வர்டு கிளைவ் மற்றும் கட்டபொம்மன்

பாஞ்சாலங்குறிச்சி திரும்பிய பின் கட்டபொம்மன் கலெக்டர் காலின் ஜாக்சன் அவரிடம் நடந்து கொண்டதை விவரித்து சென்னைக் கவுன்சிலுக்கு ஒரு கடிதம் எழுதினார். கடித்தைக் கண்ட சென்னை கவுன்சிலின் கவர்னர் எட்வர்டு கிளைவ் கட்டபொம்மனை சரணடைய ஆணையிட்டார். சென்னை கவுன்சில், கட்டபொம்மனை ஒரு குழுவின் முன்னிலையில் வர கோரியது. இதற்கிடையில் சிவசுப்பிரமணியம் விடுதலை செய்யப்பட்டதுடன், கலெக்டர் ஜாக்சன் அவருடைய தவறான அணுகுமுறைக்காக பதவி நீக்கமும் செய்யப்பட்டார். அவருக்குப்பின் கலெக்டராக S.R. லூஷிங்டன் நியமிக்கப்பட்டார்.

### பாளையக்காரர்களின் கூட்டமைப்பு

இச்சூழ்நிலையில் சிவகங்கையின் மருது பாண்டியர், அருகில் இருந்த பாளையக்காரர்களை ஒன்றிணைத்து ஆங்கிலேயர்களுக்கு எதிராக 'தென்னிந்திய கிளர்ச்சியாளர்களின் கூட்டமைப்பு' ஒன்றை உருவாக்கினார். இந்த கூட்டமைப்பு ஓர் பிரகடனத்தை வெளியிட்டது. அது 'திருச்சிராப்பள்ளி அறிக்கை' என அழைக்கப்பட்டது. கட்டபொம்மன் இந்த கூட்டமைப்பின் மீது ஆர்வத்துடன் இருந்தார். இந்த கிளர்ச்சி கூட்டமைப்பில் இணைய மறுத்த சிவகிரி பாளையத்தின் மீது கட்டபொம்மன் தனது செல்வாக்கை செலுத்த முயன்றார். கட்டபொம்மன் சிவகிரியை நோக்கி முன்னேறினார். சிவகிரி பாளையக்காரர், கம்பெனிக்கு கப்பம் கட்டுபவராக இருந்ததால் கம்பெனி, கட்டபொம்மனின் சிவகிரி மீதான படையெடுப்பு தங்கள் அதிகாரத்திற்கு விடப்பட்ட சவாலாகக் கருதினர். எனவே கம்பெனியின் படைகள் பாஞ்சாலங்குறிச்சி நோக்கி செல்ல ஆணையிடப்பட்டது.

### பாஞ்சாலங்குறிச்சி வீழ்தல்

1799 செப்டம்பர் ஐந்தாம் நாள் மேஜர் பானர்மேன் தன்னுடைய படையை பாஞ்சாலங்குறிச்சியை நோக்கி நகர்த்தினார். ஆங்கிலேயப்படை பாஞ்சாலங்குறிச்சி கோட்டையின் அனைத்து செய்தித்தொடர்புகளையும் துண்டித்தது. கோலார்பட்டியில் நடந்த சண்டையில் சிவசுப்பிரமணியம் கைது செய்யப்பட்டார். கட்டபொம்மன்புதுக்கோட்டைக்குதப்பிச்சென்றார். களப்பூர் காடுகளில் மறைந்திருந்த கட்டபொம்மனை புதுக்கோட்டை ராஜா விஜயரகுநாத தொண்டைமான் கைது செய்து

கம்பெனியிடம் ஒப்படைத்தார். பாஞ்சாலங்குறிச்சி கோட்டை வீழ்ந்தபிறகு, பானர்மேன் கைதிகளை பாளையக்கரர்களின் அவைக்கு அழைத்து சென்று ஒரு விசாரணைக்குப் பிறகு அவர்களுக்கு மரணதண்டனை விதித்தார். நாகலாபுரத்தில் சிவசுப்பிரமணியம் தூக்கிலிடப்பட்டார். அக்டோபர் 16ஆம் நாள் பாளையக்காரர் அவையின் முன் கட்டபொம்மன் விசாரிக்கப்பட்டார். அடுத்த நாள் அக்டோபர் 16, 1799 அன்று கட்டபொம்மன் கயத்தாறு என்ற இடத்தில் தூக்கிலிடப்பட்டார். இவ்வாறான கட்டபொம்மனின் வீரம் பற்றி பல நாட்டுப்புற கதைப்பாடல்கள் இன்றும் பெருமையாக கூறுகின்றன. அவை அவருடைய நினைவை மக்களிடையே நீங்காமல் வைத்திருக்கின்றன.

### வேலுநாச்சியார்

சிவகங்கையின் இராணி வேலுநாச்சியார் ஆவார். இவர் 16ஆம் வயதில் சிவகங்கையின் இராஜா முத்து வடுகநாதருக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டார். 1772இல் ஆற்காடு நவாப் மற்றும் பிரிட்டிஷ் படைகள் சிவகங்கையின் மீது போர் தொடுத்தன. அப்படை, முத்துவடுக நாதரை காளையார்கோயில் போரில் கொன்றது. வேலுநாச்சியார் தனது மகள் வெள்ளச்சி நாச்சியாருடன் தப்பித்து, திண்டுக்கல் அருகில் உள்ள விருப்பாச்சியில் கோபால நாயக்கர் பாதுகாப்பில் வாழ்ந்தார். இந்த காலகட்டத்தில் அவர் ஒரு படையை அமைத்து, ஆங்கிலேயர்கள் தங்கள் ஆயுதங்களை எங்கு சேமித்து வைத்திருக்கிறார்கள் என்பதை தனது நுண்ணறிவு படைப்பிரிவின் உதவியுடன் கண்டறிந்தார். பின்னர், தனது நம்பிக்கைக்குரிய படைத்தளபதி மற்றும் தொண்டர், குயிலி என்பவரால் ஒரு தற்கொலை தாக்குதலுக்கு ஏற்பாடு செய்தார். மருது சகோதரர்களின் உதவியுடன் சிவகங்கையைக் கைப்பற்றி மீண்டும் இராணியாக முடிசூட்டிக்கொண்டார். இந்தியாவில் பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்ட முதல் (இந்தியப்) பெண்ணரசி ஆவார். இவர் தமிழர்களால் 'வீரமங்கை' எனவும் 'தென்னிந்தியாவின் ஜான்சி ராணி' எனவும் அறியப்படுகிறார்.



**வேலுநாச்சியார்**

### மருது சகோதரர்கள்

மருது சகோதரர்கள் பொன்னாத்தாள் மற்றும் மூக்கையா பழனியப்பன் ஆகியோரின் மகன்கள் ஆவர். மூத்த சகோதரர் பெரிய மருது (வெள்ளை மருது)எனவும், இளைய சகோதரர் சின்ன மருது எனவும் அழைக்கப்பட்டனர். இவற்றில் மருது பாண்டியன் என்றழைக்கப்பட்ட சின்னமருதுபிரபலமானவர். சின்ன மருது, சிவகங்கையின் மன்னர் முத்துவடுக நாத பெரிய உடையதேவரிடம் (1750–1772) பணிபுரிந்தார். 1772இல் ஆற்காடு நவாப்பின் படைகள் சிவகங்கையை முற்றுகையிட்டு அதனைக் கைப்பற்றியது. இப்போரின் போது முத்து வடுகநாத பெரிய உடையதேவர் போரில் இறந்தார். இருப்பினும் சில மாதங்களுக்குப் பிறகு, சிவகங்கை மருது சகோதரர்களால் மீண்டும் கைப்பற்றப்பட்டு பெரிய மருது, அரசராக பொறுப்பேற்றார். சின்னமருது அவரது ஆலோசகராக செயல்பட்டார். ஆங்கிலேயர்களுக்கெதிரான தீவிர நடவடிக்கைகளின் காரணமாக அவர் 'சிவகங்கை சிங்கம்' என அழைக்கப்பட்டார். பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தென்னிந்தியாவில் மருதுசகோதரர்களால் ஆங்கிலேயர்களுக்கெதிரான கிளர்ச்சி நடைபெற்றது.



**மருது சகோதரர்கள்**

### மோதலுக்கான காரணங்கள்

கட்டபொம்மனின் இறப்பிற்கு பின், அவருடைய சகோதரர் ஊமைத்துரையும் மற்றவர்களும் சிவகங்கைக்குத் தப்பினர். அங்கு அவர்களுக்கு மருது சகோதரர்கள் பாதுகாப்பளித்தனர். மேலும் சிவகங்கை வியாபாரிகள், தங்களது உள்நாட்டு கொள்கையில் கம்பெனியின் தலையீட்டை விரும்பவில்லை. இந்த இரண்டு காரணங்களுக்காகவே, கம்பெனி சிவகங்கைக்கு எதிராக போர் புரிந்தது.

### தென்னிந்திய கிளர்ச்சி (1800–1801)

பிப்ரவரி 1801இல் கட்டபொம்மனின் சகோதரர்களான ஊமைத்துரையும் செவத்தையாவும் பாளையங்கோட்டை

சிறையிலிருந்து தப்பித்து கழுதியை வந்தடைந்தனர். அங்கிருந்து தனது தலைநகர் சிறுவயலுக்கு அவர்களை சின்னமருது அழைத்து சென்றார். கட்டபொம்மனின் சகோதரர்கள், மீண்டும் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை புனரமைத்தனர். ஏப்ரலில் காலின் மெக்காலே தலைமையில் ஆங்கிலப் படைகள் மீண்டும் கோட்டையை தன் வசப்படுத்தியது. அத்துடன் பாளையக்காரச் சகோதரர்கள் சிவகங்கையில் தான் தஞ்சமடைந்திருக்க வேண்டும் என்று கருதியது. எனவே ஆங்கிலேயர்கள் மருது சகோதரர்களிடம் தப்பித்தவர்களை தங்களிடம் ஒப்படைக்கும்படி கோரிக்கை விடுத்தனர். ஆனால் இக்கோரிக்கை மருது சகோதரர்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆகையால் கர்னல் அக்னியூ மற்றும் கர்னல் இன்ஸ் ஆகியோர் மருது சகோதரர்களுக்கெதிராக படை நடத்திச் சென்றனர்.

இப்பாளையக்காரர் போர், அதற்கு முன் நடந்த போர்களை விடவும் மிகவும் பெரிய அளவில் நடைபெற்றது. சிவகங்கையின் மருது சகோதரர்கள், திண்டுக்கல்லின் கோபால நாயக்கர், மலபாரின் கேரளவர்மன், மைசூரின் கிருஷ்ணப்பநாயக்கர் மற்றும் துண்டாஜி உள்ளிட்டோர் அடங்கிய கூட்டமைப்பால் போர் தொடங்கப்பட்டது. இக்கூட்டமைப்பிற்கு எதிராக ஆங்கிலேயர் போரை அறிவித்தனர்.

**திருச்சிராப்பள்ளி பிரகடனம் (1801)**

ஜூன் 1801இல் மருது சகோதரர்கள் 'திருச்சிராப்பள்ளி பிரகடனம்' என்றழைக்கப்பட்ட 'சுதந்திரப் பிரகடனம்' ஒன்றை வெளியிட்டனர். 1801 பிரகடனமே ஆங்கிலேயருக்கு எதிராக இந்தியர்களை ஒன்று சேர்க்கும் முதல் அழைப்பாக இருந்தது. இந்த அறிவிப்பின் ஒரு நகல் ஆற்காடு நவாபின் அரண்மனையான, திருச்சி கோட்டை சுவரிலும், மற்றொரு நகல் ஸ்ரீரங்கம் வைஷ்ணவ கோயில் சுவரிலும் ஒட்டப்பட்டது. இவ்வாறு மருது சகோதரர்கள், ஆங்கிலேயர்களுக்கெதிரான எதிர்ப்புணர்ச்சியை நாடெங்கும் பரப்பினர். இதன் விளைவாக தமிழ்நாட்டின் பல பாளையக்காரர்கள் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட ஓர் அணியாக சேர்ந்தனர். சின்னமருது, ஆங்கில படைக்கு சவாலாக கிட்டத்தட்ட 20,000 வீரர்களை திரட்டினார். ஆனால் ஆங்கிலேய படைகளுக்கு மேலும் வலுவூட்ட, வங்காளம், இலங்கை, மலாயா (மலேசியா) போன்ற இடங்களிலிருந்து படைகள் வரவழைக்கப்பட்டன. புதுக்கோட்டை, எட்டயபுரம் மற்றும் தஞ்சாவூர் மன்னர்களும் ஆங்கிலேயருக்கு ஆதரவளித்தனர். ஆங்கிலேயர்களின் பிரித்தாளும் கொள்கை பாளையக்காரர்களின் படைகளில் பிளவை ஏற்படுத்தியது.

**ஆங்கிலேயர் சிவகங்கையை இணைத்தல்**

மே 1801இல் தஞ்சாவூர் மற்றும் திருச்சி பகுதிகளில் கிளர்ச்சியாளர்களை ஆங்கிலேயர் தாக்கினர். எனவே கிளர்ச்சியாளர்கள் பிரான்மலை மற்றும் காளையார் கோயில் பகுதிகளுக்குச் சென்றனர். அவர்கள் மீண்டும் ஆங்கிலேயப் படைகளால் தோற்கடிக்கப்பட்டனர். இறுதியில் சிறந்த இராணுவ வலிமை மற்றும் சிறந்த ஆங்கில இராணுவத் தளபதிகளால் ஆங்கிலேயர் வெற்றி பெற்றனர். கிளர்ச்சி தோல்வியுற்றதால், 1801இல் சிவகங்கையை ஆங்கிலேயர் இணைத்துக் கொண்டனர். 1801 அக்டோபர் 24ஆம் நாள் மருது சகோதரர்கள், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள திருப்பத்தூர் கோட்டையில் தூக்கிலிடப்பட்டனர். 1801 நவம்பர் 16ஆம் நாள் ஊமைத்துரை மற்றும் செவத்தையா கைதுசெய்யப்பட்டு பாஞ்சாலங்குறிச்சியில் தூக்கிலிடப்பட்டனர். மேலும் 73 கிளர்ச்சியாளர்கள் மலாயாவின் பினாங்கிற்கு (பின்னர் வேல்ஸ் இளவரசர் தீவு என அழைக்கப்பட்டது) நாடு கடத்தப்பட்டனர். கிளர்ச்சியாளர்கள் ஆங்கிலேயரிடம் தோல்வியுற்றாலும் தமிழ் மண்ணில் தேசியம் என்ற விதையை விதைத்த முன்னோடிகளாவர்.

1800–1801ஆம் ஆண்டு கிளர்ச்சி ஆங்கில ஆவணங்களில் இரண்டாவது பாளையக்காரர் போர் என்று கூறப்பட்டாலும், இத்தென்னிந்திய புரட்சி தமிழக வரலாற்றில் ஓர் அடையாளமாகவே இருக்கிறது. 1801 ஜூலை 31இல் செய்துகொள்ளப்பட்ட கர்நாடக உடன்படிக்கைப்படி, தமிழ்நாட்டின் மீது ஆங்கிலேயர் நேரடி கட்டுப்பாட்டைப் பெற்றனர். இதனால் பாளையக்காரர் முறை நீக்கப்பட்டது.

### தீரன் சின்னமலை

தீரன் சின்னமலை ஈரோடு மாவட்டம் சென்னிமலை அருகிலுள்ள

மேலப்பாளையத்தில் பிறந்தார். அவரது இயற்பெயர் தீர்த்தகிரி. அவர், ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியை எதிர்த்த கொங்கு நாட்டு பாளையக்காரர் ஆவார். கொங்கு நாடு என்பது சேலம், கோயம்புத்தூர், கரூர் மற்றும் திண்டுக்கல் பகுதிகளை உள்ளடக்கிய மதுரை நாயக்க அரசின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்பகுதி மைசூர் உடையார்களால் இணைக்கப்பட்டது. மைசூர் உடையார்கள் வீழ்ந்தபிறகு, இந்தப் பகுதிகள் மைசூர் சுல்தான்களால் கட்டுப்படுத்தப்பட்டது. மூன்று மற்றும் நான்காம் மைசூர் போர்களுக்குப் பிறகு கொங்குநாடு முழுவதும் ஆங்கிலேயரின் வசமானது

தீரன் சின்னமலை, பிரெஞ்சு இராணுவத்தின் நவீன போர்முறை பயிற்சிப் பெற்றிருந்தார். இவர் திப்புசுல்தான் பக்கம் இருந்து ஆங்கிலேயருக்கெதிராக போராடி வெற்றிபெற்றார். திப்புசுல்தான் இறந்த பிறகு, இவர் ஓடாநிலை என்ற இடத்தில் தங்கி ஆங்கிலேயரைத் தொடர்ந்து எதிர்த்துப் போராட, அங்கு ஒரு கோட்டையைக் கட்டினார். 1800இல் கோயம்புத்தூரில் ஆங்கிலேயரைத் தாக்க, அவர் மராத்தியர் மற்றும் மருதுசகோதரர்களின் உதவியைப் பெற முயன்றார். ஆனால் ஆங்கிலப்படைகள் அக்கூட்டுப்படைகளைத் தடுத்து நிறுத்தியதால், தீரன் சின்னமலை மட்டும் கோயம்புத்தூரை தாக்கும் நிலைக்கு உள்ளானார். அதனால் அவரது படை தோற்கடிக்கப்பட்டது. அவர் ஆங்கில படைகளிடமிருந்து தப்பித்த தீரன் சின்னமலை காவேரி, ஓடாநிலை மற்றும் அரச்சலூர் போன்ற இடங்களில் நடைபெற்ற போர்களில் கொரில்லா போர் முறையில் ஆங்கிலப் படைகளைத் தோற்கடித்தார். இறுதி போரின் போது சின்னமலை தனது சமையற்காரர் நல்லப்பன் என்பவரால் காட்டிக்கொடுக்கப்பட்டதால் 1805இல் சங்ககிரி கோட்டையில் தூக்கிலிடப்பட்டார்.

## வேலூர் கலகம் (1806)

நான்காம் மைசூர் போருக்குப் பிறகு திப்புவின் குடும்பத்தினர் வேலூர் கோட்டையில் சிறைவைக்கப்பட்டனர். மைசூரின் ஹைதர் அலி, திப்புசுல்தான் ஆகியோரின் பணியாளர்கள் மற்றும் வீரர்கள் 3000 பேரின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டதால் அவர்கள் வேலூருக்கு அருகில் இடம் பெயர்ந்தனர். இதனால் அனைவரும் துயரமடைந்து ஆங்கிலேயரை வெறுக்கவும் செய்தனர்.



வேலூர் கோட்டை

வேலூர் கோட்டையானது பெரும்பாலான இந்திய வீரர்களைக் கொண்டிருந்தது. அதன் ஒரு பகுதியினர் அப்பொழுதுதான் 1800இல் நடைபெற்ற திருநெல்வேலி பாளையக்காரர் கிளர்ச்சியில் பங்கு பெற்றவர்களாகவும் இருந்தனர். மேலும் பல்வேறு பாளையங்களைச் சேர்ந்த பயிற்சி பெற்ற வீரர்கள் ஆங்கிலப் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். எனவே வேலூர் கோட்டை தென்னிந்திய கிளர்ச்சியாளர்களின் சந்திப்பு மையமாக திகழ்ந்தது.

1803இல் வில்லியம் காவெண்டிஷ் பெண்டிங் என்பவர் சென்னை மாகாண கவர்னரானார். அவரது காலத்தில் (1805–1806) சில கட்டுப்பாடுகள் இராணுவத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது, அதனை பின்பற்ற வேண்டுமென இராணுவ வீரர்கள் சென்னை மாகாண படைத்தளபதி சர் ஜான் கிரடாக் என்பவரால் கட்டாயப்படுத்தப்பட்டனர். சிப்பாய்கள் அதனை தங்களை அவமானப்படுத்த ஆங்கிலேயரால் வடிவமைக்கப்பட்டது எனக்கருதினர்.

**கலகத்திற்கான காரணங்கள்**

- கடுமையான கட்டுப்பாடுகள், புதிய ஆயுதங்கள், புதிய முறைகள் மற்றும் சீருடைகள் என அனைத்தும் சிப்பாய்களுக்கு புதிதாக இருந்தன.
- தாடி, மற்றும் மீசையை மழித்து நேர்த்தியாக வைத்துக்கொள்ள சிப்பாய்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

- சமய அடையாளத்தை நெற்றியில் அணிதல், காதுகளில் வளையம் (கடுக்கன்) அணிதல் ஆகியன தடைசெய்யப்பட்டன.
- ஆங்கிலேயர்கள், இந்திய சிப்பாய்களை தாழ்வாக நடத்தியதோடு மட்டுமல்லாமல் சிப்பாய்களிடையே இன பாரபட்சமும் காட்டினர்.

**உடனடிக் காரணம்**

ஜூன் 1806இல் இராணுவத் தளபதி அக்னியூ, ஐரோப்பிய தொப்பியை ஒத்திருந்த சிலுவை சின்னத்துடன் கூடிய ஒரு புதிய தலைப்பாகையை அறிமுகப்படுத்தினார். அது பிரபலமாக 'அக்னியூ தலைப்பாகை' என அழைக்கப்பட்டது. இந்து மற்றும் முஸ்லீம் வீரர்கள் ஒன்றாக இதனை எதிர்த்தனர். இதனால் வீரர்கள் ஆங்கிலேயர்களால் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர்.

**கலகத்தின் போக்கு**

இந்திய வீரர்கள் ஆங்கில அலுவலர்களைத் தாக்குவதற்கு ஒரு வாய்ப்பினை எதிர்பார்த்து காத்திருந்தனர். திப்பு குடும்பத்தினரும் இதில் பங்கெடுத்துக் கொண்டனர். திப்புவின் மூத்த மகன் பதே ஹைதர் ஆங்கிலேயருக்கு எதிரான ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்த முயன்றார். இதற்கிடையில் ஜூலை 10ஆம் நாள் விடியற்காலை, முதலாவது மற்றும் 23 வது படைப்பிரிவுகளைச் சார்ந்த இந்திய சிப்பாய்கள் கலகத்தை தொடங்கினர். படையை வழிநடத்திய கர்னல் பான்கோர்ட் கிளர்ச்சியாளர்களின் தாக்குதலுக்கு முதல் பலியானார். கோட்டையின் நுழைவாயில்கள் மூடப்பட்டன. அப்பொழுது கிளர்ச்சியாளர்கள் பதே ஹைதரை தங்களின் புதிய ஆட்சியாளராக அறிவித்தனர். வேலூர் கோட்டையில் ஆங்கிலக் கொடி இறக்கப்பட்டு புலி உருவம் பொறித்த திப்புவின் கொடி ஏற்றப்பட்டது.

**கலகம் அடக்கப்படுதல்**

கோட்டையின் வெளியே இருந்த மேஜர் கூட்ஸ் இராணிப்பேட்டைக்கு விரைந்து கர்னல் கில்லெஸ்பிக்கு தகவல் கொடுத்தார். கர்னல் கில்லெஸ்பி உடனடியாக வேலூர் கோட்டையை அடைந்தார். அவர் கிளர்ச்சி படைகளின் மீது தாக்குதல் நடத்தி கலகத்தை முழுமையாக அடக்கினார்.வேலூரில் அமைதி ஏற்படுத்தப்பட்டது. கலகத்தில் மொத்தம் 113 ஐரோப்பியர்கள் மற்றும் சுமார் 350 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். குறுகிய காலத்திற்குள் கலகம் அடக்கப்பட்டது. எனினும் தமிழக வரலாற்றின் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளுள் இதுவும் ஒன்றாக திகழ்ந்தது.

**வேலூர் கலகத்தின் விளைவுகள்**

- புதிய முறைகள் மற்றும் சீருடை ஒழுங்கு முறைகள் விலக்கிக் கொள்ளப்பட்டன.
- முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக திப்புவின் குடும்பத்தினர் வேலூரிலிருந்து கல்கத்தாவிற்கு அனுப்பப்பட்டனர்.
- வில்லியம் காவெண்டிஷ் பெண்டிங் பணி நீக்கம் செய்யப்பட்டார்.

**கலகத்தின் தோல்விக்கான காரணங்கள்**


- இந்திய படை வீரர்களை வழிநடத்த சரியான தலைமையில்லை.
- கலகம் மிகச் சரியாக வடிவமைக்கப்படவில்லை.
- ஆங்கிலேயர்களின் பிரித்தாளும் கொள்கை இந்தியர்களின் ஒற்றுமையில் பிளவை ஏற்படுத்தியது.

**மதிப்பீடு**

1806இல் நடந்த வேலூர் கலகத்தை, 1857இல் நடைபெற்ற 'முதல் இந்திய சுதந்திரப் போரின் முன்னோடி' என V.D.சவார்க்கர் என்ற வரலாற்றாசிரியர் குறிப்பிடுகிறார்.

## பெரும் புரட்சி (1857)

இந்தியாவில் ஆங்கிலேயர்களை அச்சுறுத்தும் வகையில் நடைபெற்ற ஆரம்பகால கலகங்கள் வெற்றிபெறவில்லை. எனவே அது 1857ஆம் ஆண்டு புரட்சிக்கு வழிகோலியது. அதன்மூலம் கம்பெனி அதன் நாட்டிற்கு திரும்பிச் செல்லவும், ஆங்கிலேயர்களின் ஆட்சியை மக்களில் பெரும்பாலானோர் ஏற்கவில்லை என ஆங்கிலேயர்களை எண்ணவும் செய்தது. 1857ஆம் ஆண்டு புரட்சியானது காலனி ஆட்சியினுடைய பண்பு மற்றும் கொள்கையின் விளைவாக உருவானதாகும். ஆங்கிலேயரின் விரிவுபடுத்தப்பட்ட கொள்கைகள், பொருளாதார சுரண்டல், மற்றும் நிர்வாக புதுமைகள் ஆகியவற்றின் ஒட்டுமொத்த விளைவே இந்தியாவின் அனைத்து அரசர்களின் நிலைமையிலும் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தின.




**புரட்சிக்கான காரணங்கள்**

- ஆங்கிலேயரின் பொருளாதார ரீதியான சுரண்டல் கொள்கையே, 1857ஆம் ஆண்டு புரட்சிக்குமுக்கிய காரணமாக இருந்தது. இது சமுதாயத்தின் அனைத்து பிரிவினரையும் காயப்படுத்தியது. அதிகப்படியான வரிவிதிப்பு மற்றும் கடுமையான வரிவசூல் முறைகளால் விவசாயிகள் துன்புற்றனர்.
- வாரிசு இழப்புக் கொள்கை, துணைப்படைத் திட்டம் மற்றும் பல கட்டுப்பாடுகள் ஆகியன மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது. மேலும் முறையற்ற வகையில் அயோத்தியை இணைத்தும் கூட ஆங்கிலேயரின் பிரதேச விரிவாக்கக் கொள்கை திருப்தி அடையவில்லை
- கிறித்துவ சமய பரப்பு குழுவினரின் மதமாற்ற நடவடிக்கைகள் மக்களால் அச்சத்துடனும் சந்தேகத்துடனும் பார்க்கப்பட்டது. மேலும் சமய தலைவர்கள் மற்றும் இஸ்லாமிய சமய அறிஞர்கள் (Maulavis) ஆங்கில ஆட்சிக்கெதிராக அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

- சதி ஒழிப்பு, பெண்சிசுக் கொலை ஒழிப்பு, விதவை மறுமணம் மற்றும் பெண் கல்விக்கான ஆதரவு போன்ற ஆங்கிலேயரின் நடவடிக்கைகள் இந்தியர்களின் கலாச்சாரத்தில் ஐரோப்பியர்கள் தலையிடுவதாக கருதப்பட்டது.
- இந்திய சிப்பாய்கள், ஆங்கில அதிகாரிகளால் தாழ்வாகவும் அவமரியாதையாகவும் நடத்தப்பட்டனர். ஆங்கில வீரர்களைக் காட்டிலும் இந்திய வீரர்கள் குறைவான ஊதியம் பெற்றனர். மேலும் இராணுவ பதவி உயர்வுகள் அனைத்தும் இந்திய வீரர்களுக்கு மறுக்கப்பட்டு ஆங்கில வீரர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டன.

### உடனடிக் காரணம்

இராணுவத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட என்பீல்டுரக துப்பாக்கியே உடனடிக்காரணமாக இருந்தது. இந்த வகைத் துப்பாக்கியில் குண்டுகளை நிரப்புவதற்கு முன் அதன் மேலுறையை பற்களால் கடித்து நீக்க வேண்டும். அதன் மேலுறையில் பசுவின் கொழுப்பு மற்றும் பன்றியின் கொழுப்பு தடவப்பட்டிருந்தது. எனவே இதனை இந்திய சிப்பாய்கள் (இந்து, முஸ்லீம்) தங்கள் மத உணர்வை புண்படுத்துவதாக கருதினர். ஏனெனில் இந்துக்கள் பசுவை புனிதமாகக் கருதுபவர்களாகவும். முஸ்லீம்கள் பன்றியை வெறுப்பவர்களாகவும் இருந்தனர். ஆகையால் இந்து முஸ்லீம் வீரர்கள் என்பீல்டு துப்பாக்கியைப் பயன்படுத்த மறுத்து புரட்சியில் ஈடுபட்டனர். இவ்வாறு கொழுப்பு தடவப்பட்ட தோட்டாக்கள் புரட்சிக்கு அடிப்படை மற்றும் உடனடிக் காரணமாயிற்று.

### கலகத்தின் தோற்றம்



மங்கள் பாண்டே

1857 மார்ச் 29ஆம் நாள் பாரக்பூரில் (கொல்கத்தா அருகில்) உள்ள வங்காள படைப்பிரிவைச் சேர்ந்த மங்கள் பாண்டே என்ற இளம் சிப்பாய் கொழுப்பு தடவப்பட்ட துப்பாக்கியைப் பயன்படுத்த மறுத்து தனது உயரதிகாரியைச் சுட்டுக் கொன்றார். அதனால் அவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குப் பின் தூக்கிலிடப்பட்டார். இச்செய்தி பரவியதால், பல சிப்பாய்கள் புரட்சியில் ஈடுபட்டனர்.

### புரட்சியின் போக்கு

1857 மே 10ஆம் நாள் மீரட்டில் மூன்றாம் குதிரைப் படையைச் சேர்ந்த சிப்பாய்கள் சிறைச்சாலையை உடைத்து, தங்களது சக படைவீரர்களை விடுவித்ததன் மூலம் வெளிப்படையாக புரட்சியில் ஈடுபட்டனர். அவர்கள் உடனே 11 ஆவது மற்றும் 20 ஆவது உள்ளூர் காலாட்படையினருடன் இணைந்தனர், மேலும், சிலர் ஆங்கில அலுவலர்களைக் கொலை செய்ததுடன், டெல்லிக்கும் விரைந்தனர். டெல்லிக்கு வந்த மீரட் சிப்பாய்கள் மே 11ஆம் நாள் இரண்டாம் பகதூர்ஷாவை இந்தியாவின் பேரரசராக அறிவித்தனர். அதன் மூலம் டெல்லி பெரும் புரட்சியின் மையமாகவும் பகதூர்ஷா அதன் அடையாளமாகவும் விளங்கினார்.

புரட்சி மிக வேகமாக பரவியது. லக்னோ, கான்பூர், ஜான்சி, பரெய்லி, பீகார், பைசாபாத் மற்றும் வட இந்தியாவின் பல பகுதிகளில் கலகங்கள் ஏற்பட்டன. புரட்சியாளர்களுள் பலர், நிழக்கிழார்களிடம் தாங்கள் கொடுத்த பத்திரங்களை எரிக்க,

மத்திய இந்தியாவில் புரட்சி ஜான்சியின் ராணி இலட்சுமிபாய் அவர்களால் வழிநடத்தப்பட்டது. இந்தியாவின் மாபெரும் தேசபக்தர்களுள் அவரும் ஒருவர். சர் ஹக்ரோஸ் ஜான்சியை ஆக்கிரமித்தார். ஜான்சியிலிருந்து தப்பிய இராணி லட்சுமிபாய், குவாலியரில் படையை தலைமையேற்று வழிநடத்திய தாந்தியா தோபேவுடன் இணைந்தார். ஆனால் ஆங்கிலப் படை ஜூன் 1858இல் குவாலியரை கைப்பற்றியது. போரில் ராணி லட்சுமிபாய் கொல்லப்பட்டார். தப்பிய தாந்தியா தோபே கைது செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்டார். ஆங்கில வரலாற்றாசிரியர்களின் கூற்றுப்படி 1857 புரட்சியில் கலந்து கொண்ட தலைவர்களில் மிகவும் துணிச்சலானவர் இராணி லட்சுமிபாய் ஆவார்.



இதனை ஒரு நல்வாய்ப்பாகக் கருதினர். ஆங்கில அரசு பலருடைய பட்டங்கள், ஒய்வூதியங்களை நீக்கியதால் ஆங்கில அரசை பழிவாங்குவதற்காக புரட்சியில் பலர் கலந்துகொண்டனர்.

**கலகம் அடக்கப்படுதல்**

கவர்னர் ஜெனரல் கானிங் பிரபு புரட்சியை அடக்க உடனடியாக நடவடிக்கை எடுத்தார். அவர் சென்னை, பம்பாய், இலங்கை மற்றும் பர்மாவிலிருந்து படைகளை வரவழைத்தார். மேலும் அவரது சொந்த முயற்சியால் சீனாவிலிருந்த ஆங்கிலப் படைகளை கல்கத்தாவிற்கு வரவழைத்தார். விசுவாசமான சீக்கிய படைகளை உடனடியாக டெல்லிக்கு விரைந்து செல்லுமாறு ஆணையிட்டார். இதன்மூலம் ஆங்கிலேயர் தாங்கள் இழந்த பகுதிகளை உடனே மீட்டனர்.

1857 செப்டம்பர் 20இல் படைத்தளபதி நிக்கல்சனால் டெல்லி மீண்டும் கைப்பற்றப்பட்டது. எனவே, இரண்டாம் பகதூர்ஷா ரங்கூனுக்கு நாடு கடத்தப்பட்டார். அங்கு அவர் 1862இல் இறந்தார்.

கான்பூர் மீட்பு இராணுவ நடவடிக்கைகள், லக்னோ மீட்பு நடவடிக்கைகளுடன் நெருங்கிய தொடர்புகொண்டிருந்தது. சர் காலின் கேம்பெல் கான்பூரை கைப்பற்றினார். கான்பூரில் புரட்சியை வழிநடத்திச் சென்ற நானா சாகிப் தோற்கடிக்கப்பட்டார். தோற்ற நானா சாகிப் நேபாளத்திற்கு தப்பியோடினார். அவரது நெருங்கிய நண்பர் தாந்தியா தோபே மத்திய இந்தியாவுக்கு தப்பிச்சென்றார். தப்பிய அவர் தூங்கும் பொழுது கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார். இராணி லட்சுமிபாய் போர்களத்தில் கொல்லப்பட்டார். கன்வர்சிங், மற்றும் கான் பகதூர் கான் ஆகிய இருவரும் போரில் இறந்தனர். அயோத்தியின் பேகம் ஹஸ்ரத் மகால் நேபாளத்தில் மறைந்து வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டார். இவ்வாறாக புரட்சி முழுவதும் அடக்கப்பட்டது. 1859ஆம் ஆண்டின் இறுதியில் பிரிட்டிஷ் அதிகாரம் மீண்டும் இந்தியா முழுவதும் நிறுவப்பட்டது.

**கலகத்தின் தோல்விக்கான காரணங்கள்**

கலகத்தின் தோல்விக்கு பல நிகழ்வுகள் காரணமாக அமைந்தன.

- சரியான ஒருங்கிணைப்பு, ஒழுக்கம், கட்டுப்பாடு, பொதுவானதிட்டம், மையப்படுத்தப்பட்ட தலைமை, நவீன ஆயுதங்கள் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவை புரட்சியாளர்களிடையே இல்லை.
- கலகத்தில் ஈடுபட்டவர்கள், ஆங்கில படைத்தளபதிகளுக்கு இணையானவர்களாக இல்லை. மேலும் இராணி லட்சுமிபாய், நானாசாகிப் மற்றும் தாந்தியா தோபே ஆகியோர் தைரியமானவர்கள், ஆனால் சிறந்த தளபதிகளாக இல்லை.
- வங்காளம்,பம்பாய்,சென்னை,மேற்குபஞ்சாப் மற்றும் இராஜபுதனம் ஆகிய பகுதிகள் புரட்சியில் கலந்து கொள்ளவில்லை.
- நவீனக் கல்வி கற்ற இந்தியர்கள் ஆங்கில ஆட்சி மட்டுமே இந்திய சமுதாயத்தை சீர்திருத்தி நவீனப்படுத்த முடியும் என நம்பினர். எனவே அவர்கள் புரட்சியை ஆதரிக்கவில்லை.
- சீக்கியர்கள், ஆப்கானியர்கள் மற்றும் கூர்க்கா படைப்பிரிவினர் ஆகியோர்களின் விசுவாசத்தை ஆங்கிலேயர் பெற்றனர். புரட்சியை அடக்குவதில் கூர்க்காப் படையினர் ஆங்கிலேயருக்கு உதவினர்.
- ஆங்கிலேயர்கள் சிறந்த ஆயுதங்கள், சிறந்த தளபதிகள் மற்றும் சிறந்த ஒருங்கிணைப்பைக் கொண்டிருந்தனர்.

| கலகம் நடைபெற்ற இடங்கள் | இந்திய தலைவர்கள் | கலகத்தை அடக்கிய ஆங்கிலேய அதிகாரிகள் |
|---|---|---|
| டெல்லி | இரண்டாம் பகதூர்ஷா | ஜான் நிக்கல்சன் |
| லக்னோ | பேகம் ஹஸ்ரத் மகால் | ஹென்றி லாரன்ஸ் |
| கான்பூர் | நானா சாகிப் | சர் காலின் கேம்பெல் |
| ஜான்சி & குவாலியர் | ராணிலட்சுமிபாய், தாந்தியா தோபே | ஜெனரல் ஹக்ரோஸ் |
| பரெய்லி | கான் பகதூர் கான் | சர் காலின் கேம்பெல் |
| பீகார் | கன்வர் சிங் | வில்லியம் டைலர் |

**கலகத்தின் விளைவுகள்**

- 1857ஆம் ஆண்டு கலகம் இந்திய வரலாற்றில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியது. அது நிர்வாக முறை மற்றும் அரசின் கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்பட வழிகோலியது.
- 1858ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட விக்டோரியா மகாராணியின் பேரறிக்கையின் மூலம் இந்தியாவின் நிர்வாகம் கிழக்கிந்திய கம்பெனியிடமிருந்து ஆங்கில (பாராளுமன்றத்திற்கு) அரசுக்கு மாற்றப்பட்டது.
- கவர்னர்–ஜெனரல், அதன் பிறகு வைசிராய் என அழைக்கப்பட்டார்.
- இயக்குநர் குழு மற்றும் கட்டுப்பாட்டு வாரியம் நீக்கப்பட்டு இந்திய விவகாரங்களை மேற்பார்வையிட செயலரின் தலைமையில் 15 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சபை (கவுன்சில்) ஏற்படுத்தப்பட்டது.
- இந்திய இராணுவம் முற்றிலும் மாற்றியமைக்கப்பட்டது. அதிகப்படியான ஆங்கிலேயர்கள், இராணுவத்தில் பணியமர்த்தப்பட்டனர்.
- 'பிரித்தல் மற்றும் எதிர் தாக்குதல்' என்ற கொள்கை ஆங்கில இராணுவக் கொள்கையில் ஆதிக்கம் செலுத்தியது.

உண்மையில் 1857ஆம் ஆண்டு புரட்சி இந்திய மக்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து இந்தியா ஒரே நாடு என்ற உணர்வை கொண்டு வருவதில் முக்கிய பங்கு வகித்தது. பெரும் புரட்சி நவீன தேசிய இயக்கம் தோன்ற வழிவகுத்தது. 1857ஆம் ஆண்டு பெரும் புரட்சி இருபதாம் நூற்றாண்டின் தொடக்கமாக இருந்தது. வி.டி. சவார்க்கர் 'முதல் இந்திய சுதந்திர போர்' என்ற தனது நூலில் 1857ஆம் ஆண்டு பெரும் புரட்சியை 'ஒரு திட்டமிடப்பட்ட தேசிய சுதந்திரப் போர்' என விவரிக்கிறார்.

## மீள்பார்வை

- விஜயநகர ஆட்சியாளர்கள் தங்கள் மாகாணங்களில் நாயக்கர்களை நியமித்தனர்.
- மதுரை நாயக்கர்கள் பாளையக்காரர்களை நியமித்தனர்.
- ஆங்கிலேயர்கள் பெற்ற வரி வசூலிக்கும் உரிமையால் பாளையக்காரர்கள் கலகம் வெடித்தது.
- கப்பம்(வரி) வசூலித்ததே கட்டபொம்மனுக்கும், ஆங்கிலேயருக்குமிடையே போட்டி ஏற்பட முதன்மை காரணமானது.
- மருது சகோதரர்கள் மூக்கையா பழனியப்பன் மற்றும் பொன்னாத்தாள் ஆகியோரின் மகன்களாவர்.
- பிரெஞ்சு இராணுவத்தின் மூலம் தீரன் சின்னமலை நவீனபோர் முறைகளில் பயிற்சி பெற்றார்.
- திப்பு சுல்தான் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கெதிராக போரிட்டார்.
- 1857ஆம் ஆண்டு புரட்சியின் தலைவர்களில் இராணி லட்சுமிபாய் மிகச் சிறந்த மற்றும் மிகத்துணிச்சலான தலைவர் ஆவார்.

| கலைச்சொற்கள் | | |
|---|---|---|
| தூக்கிலிடு | Beheaded | Hanged to death |
| காட்டிக்கொடு | Betrayed | Give away information about somebody |
| தோட்டா | Cartridge | Bullet |
| முடிவாக | Eventually | In the end |
| காலாட்படை | Infantry | An army unit consisting of soldiers who fight on foot |
| கப்பம் | Tribute | Payment made periodically by one state |
| கூட்டம் | Swarm | Crowd |

## மதிப்பீடு

### I சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. பாளையக்காரர் முறை ஏற்படுத்தப்பட்ட ஆண்டு
   அ) 1519 ஆ) 1520
   இ) 1529 ஈ) 1530
2. பின்வரும் தமிழ்நாட்டு பாளையக்காரர்களுள் ஆங்கில ஆட்சியை எதிர்த்ததில் முன்னோடியானவர்
   அ) பூலித்தேவர்
   ஆ) யூசுப்கான்
   இ) கட்டபொம்மன்
   ஈ) மருது சகோதரர்கள்
3. காலின் ஜாக்சன் எந்தப் பகுதியின் ஆட்சியாளர்?
   அ) மதுரை
   ஆ) திருநெல்வேலி
   இ) இராமநாதபுரம்
   ஈ) தூத்துக்குடி
4. வீரபாண்டிய கட்டபொம்மன் கீழ்க்கண்ட எந்த இடத்தில் தூக்கிலிடப்பட்டார்?
   அ) பாஞ்சாலங்குறிச்சி ஆ) சிவகங்கை
   இ) திருப்பத்தூர் ஈ) கயத்தாறு
5. வேலு நாச்சியார் எப்பகுதியின் ராணி ஆவார்?
   அ) நாகலாபுரம் ஆ) சிவகிரி
   இ) சிவகங்கை ஈ) விருப்பாச்சி
6. 'திருச்சிராப்பள்ளி பிரகடனம்' யாரால் வெளியிடப்பட்டது?
   அ) மருது பாண்டியர்கள்
   ஆ) கிருஷ்ணப்ப நாயக்கர்
   இ) வேலு நாச்சியார்
   ஈ) தீரன் சின்னமலை
7. கீழ்க்கண்டவைகளுள் தீரன் சின்னமலையோடு தொடர்புடைய பகுதி எது?
   அ) திண்டுக்கல் ஆ) நாகலாபுரம்
   இ) புதுக்கோட்டை ஈ) ஓடாநிலை
8. ராணி லட்சுமிபாய் எப்பகுதியில் ஏற்பட்ட புரட்சியை வழிநடத்தினார்?
   அ) மத்திய இந்தியா ஆ) டெல்லி
   இ) கான்பூர் ஈ) பரெய்லி

### II கோடிட்ட இடங்களை நிரப்புக

1. கிழக்குப்பகுதி பாளையங்கள் ________ கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது.
2. விஸ்வநாத நாயக்கர் அவரது அமைச்சர் ________ உடன் கலந்தாலோசித்து பாளையக்கார முறையை ஏற்படுத்தினார்.
3. கட்டபொம்மனின் முன்னோர்கள் ________ பகுதியைச் சார்ந்தவர்கள்.
4. ________ தமிழர்களால் 'வீர மங்கை' எனவும் தென்னிந்தியாவின் ஜான்சி ராணி எனவும் அறியப்பட்டார்.
5. ________ 'சிவகங்கையின் சிங்கம்' என அழைக்கப்படுகிறார்.
6. 1857 ஆம் ஆண்டு புரட்சியை ________ என்பவர் 'முதல் இந்திய சுதந்திரப் போர்' என விவரிக்கிறார்.

### III பொருத்துக

| | | |
|---|---|---|
| 1 | டெல்லி | கன்வர் சிங் |
| 2 | கான்பூர் | கான் பகதூர் கான் |
| 3 | ஜான்சி | நானா சாகிப் |
| 4 | பரெய்லி | லட்சுமி பாய் |
| 5 | பீகார் | இரண்டாம் பகதூர் ஷா |

### IV சரியா / தவறா எனக் குறிப்பிடுக

1. விஜய நகர ஆட்சியாளர்கள் தங்கள் மாகாணங்களில் நாயக்கர்களை நியமித்தனர். சரி
2. சிவசுப்பிரமணியம் என்பவர் மருது பாண்டியர்களின் அமைச்சர் ஆவார். தவறு
3. 1799 அக்டோபர் 16 ஆம் நாள் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டார். சரி
4. திப்பு சுல்தானின் மூத்த மகன் பதே ஹைதர் ஆவார். சரி

V அ) பின்வரும் கூற்றை ஆராய்ந்து சரியான விடையைக் குறிப்பிடவும்

I. வேலூர் புரட்சி 1801ஆம் ஆண்டு ஏற்பட்டது.

II. நான்காம் மைசூர் போருக்குப்பின் திப்புவின் குடும்பத்தினர் வேலூர் கோட்டையில் சிறைவைக்கப்பட்டனர்.

III. வேலூர் புரட்சியின் போது வில்லியம் பெண்டிங் சென்னையின் ஆளுநராக இருந்தார்.

IV. ஆங்கிலேயருக்கு எதிரான வேலூர் கலகத்தின் வெற்றி இந்திய வரலாற்றில் ஒரு முக்கியமான நிகழ்வு ஆகும்.

அ) I & II சரி ஆ) II & IV சரி

இ) II & III சரி ஈ) I, II, & IV சரி

ஆ) தவறான இணையைக் கண்டுபிடிக்கவும்

அ) மருது பாண்டியர் – எட்டயபுரம்

ஆ) கோபால நாயக்கர் – திண்டுக்கல்

இ) கேரளவர்மன் – மலபார்

ஈ) துண்டாஜி – மைசூர்

இ) மாறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி

அ) கட்டபொம்மன் ஆ) ஊமைத்துரை

இ) செவத்தையா ஈ) திப்பு சுல்தான்

II கோடிட்ட இடங்களை நிரப்புக – ANSWERS

1) கட்டபொம்மன்
2) அரியநாதர்
3) ஆந்திரா
4) வேலுநாச்சியார்
5) சின்ன மருது
6) வி.டி. சவார்க்கர்

# TEST 1

# UNIT III : HISTORY & INM

## வேற்றுமையில் ஒற்றுமை

( Ref : 12th Ehics )

### கற்றல் நோக்கங்கள்

- மொழிகளின் ஒற்றுமையையும் அவற்றின் தன்மையையும் அறிந்து கொள்ளுதல்.
- பண்பாட்டு ஒற்றுமைக்கான அடிப்படைக் காரணங்களை அறிந்து கொள்ளுதல்.
- பல்வேறு மக்களிடையே காணப்படும் மொழி, சமயம், சமூக பொருளாதார வேற்றுமைகளை அறிந்துகொள்ளுதல்.
- பல்வேறு வேற்றுமைகளுக்கிடையே அரசியல், சமூக, பண்பாட்டு ஒற்றுமைகளை புரிந்து கொள்ளுதல்.
- பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதன் அவசியத்தை புரிந்து கொள்ளுதல்.

### நுழைவு வாயில்

இந்தியாவில் மொழி, இனம், சமயம், நிறம், வாழிடச்சூழல் போன்ற பல்வேறு பிரிவுகளால் மக்கள் பிரிந்திருந்தாலும் **இந்தியர்** என்ற உணர்வு அனைவரையும் ஒன்றிணைக்கிறது. உலகளவில் மிகப்பெரிய மக்களாட்சி நாடாக இந்தியா சிறந்து விளங்கக்காரணம்; வேற்றுமையில் ஒற்றுமைகாணும் இந்திய மக்களின் மனப்பான்மையேயாகும். இந்தியாவில் மொழியும், கலாச்சாரமும், பழக்கவழக்கங்களும், விருந்தோம்பல் முறைகளும் மிகச்சிறப்பாகப் பின்பற்றப்படுகின்றன. நம் மக்கள் உயிரிரக்கத்தை (ஜீவகாருணியம்) முக்கிய நோக்கமாகக் கொண்டு வாழ்ந்தவர்கள். வர்த்தமான மகாவீரர், கௌதமபுத்தர், ஆழ்வார்கள், நாயன்மார்கள் ஆகியோருடைய கோட்பாடுகள் உயரிய ஆன்மிகத்தையே நோக்கமாகக் கொண்டு மக்களிடம் போதிக்கப்பட்டன.

எண்ணற்ற அதிசயங்களைத் தன்னகத்தே கொண்டது இந்தியா என்று கூறும் புகழ்மிக்க வரலாற்று அறிஞர் எ.எல். பாஷம் (A.L. Basham) அவர்கள் **"அதிசயம் அதுதான் இந்தியா"** (The wonder that was India) என்றும் குறிப்பிட்டுள்ளார். இந்நூல் இந்திய கிராம மக்களின் சடங்குகள், சம்பிரதாயங்கள் பழம்பெருமையைப் பறைசாற்றுகின்றது.

இந்தியாவிலுள்ள அனைத்துக் கிராமங்களில் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு தனித்துவம் உண்டு என்பதையும் நாம் அறிவோம் என்பது அனைவரும் அறிந்ததே.

உலகில் காணும் பல்வேறு நாகரிகப் பண்பாடுகளின் ஒன்றிணைப்பை இங்கு காணலாம். உலகளவில் இந்தியா ஏழாவது மிகப்பெரிய பரந்து விரிந்த பழைமையான நாடாகும். இந்நாடு 28 மாநிலங்களையும் 9 யூனியன் பிரதேசங்களையும் கொண்டு திகழ்கிறது. 2011-ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி இந்திய மக்கள் தொகை 121 கோடிக்கு மேல் உள்ளது.

### கங்கை நதி

*2008 ஆம் ஆண்டு இந்தியாவின் தேசிய நதியாகக் கங்கை அறிவிக்கப்பட்டது. இந்தியாவின் நீளமான நதி, புனிதமான நதி, மிக அதிக எண்ணிக்கையிலான துணை நதிகளைப் பெற்றுள்ள நதி என்று பல சிறப்புகளைக் கங்கைநதி பெற்றுள்ளது.*



*நாம் இந்தியர் என்பதில் பெருமிதம் கொள்வதற்குப் பல காரணங்கள் இருந்தாலும், நம் நாட்டில் நிலவும் வேற்றுமையில் ஒற்றுமை என்னும் பண்புதான் தலைசிறந்து காணப்படுகிறது. நம்மிடையே இருக்கும் வேறுபாடுகளே ஒருவர், மற்றவர்மீது ஆர்வமும் அக்கறையும் செலுத்துவதற்குக் காரணமாக அமைகின்றது.*

*இந்தியா முழுவதும் பொதுவாகப் பின்பற்றப்படுகின்ற தேசியக்கொடி, தேசிய சின்னம், தேசிய கீதம், தேசிய பறவை போன்றவை வேற்றுமையில் ஒற்றுமையை நிலைநாட்டும் காரணிகளாகத் திகழ்கின்றன.*

## வேற்றுமையில் ஒற்றுமை வரையறை :–

*நம்நாடு நிலவியல் அமைப்பு, இனம்,மொழி, இலக்கியம், சமயம், சமுதாய அமைப்பு, பொருளாதாரம், வாழ்க்கைச்சடங்குகள், பாரம்பரியங்களால் வேறுபட்டகூறுகளைக் கொண்டிருந்தாலும் 'இந்தியர்' என்ற ஒருமைப்பாட்டு உணர்வு மக்களிடம்உள்ளது.இதனையேவேற்றுமையில் ஒற்றுமை என்கிறோம். இவ்வுயரிய கோட்பாடே இந்தியப் பண்பாட்டின் தனிச்சிறப்பு எனலாம்.*

## வேற்றுமைக் கூறுகள்

### நிலவியல் வேற்றுமைகள்

*இந்தியா, வடக்கே இமயமலைமுதல் தெற்கே கன்னியாகுமரிவரை பரந்து விரிந்து காணப்படும் மிகப்பெரிய ஒரு நாடாகும். இமயமலை, இந்தியாவை ஆசியக்கண்டத்திலிருந்து பிரிக்கிறது. இந்தியாவின் மேற்கே அரபிக்கடல், கிழக்கே வங்காள விரிகுடா, தெற்கே இந்து மகா சமுத்திரம் ஆகிய மூன்று பக்கம் கடலாலும் ஒருபுறம் நிலப்பரப்பாலும் சூழப்பட்டுள்ளதால் இந்தியாவைத் தீபகற்ப நாடு என அழைக்கிறோம். இந்தியத் துணைக்கண்டத்தின் இயற்கை அமைப்பினைப் பொருத்தவரையில் எண்ணிலடங்காத வேற்றுமைகளை நாம் காணமுடிகிறது. இந்தியாவின் காலநிலை, தட்பவெப்பநிலை, மழைப்பொழிவு, மண்வகைகள் மற்றும் செடிகொடிகளில் வேற்றுமைக் கூறுகள் நிலவுகின்றன.*

*இந்தியாவின் வடபகுதி குளிர்காலத்தில் குளிர் அதிகமாக இருந்தாலும், மனிதன் வாழவே இயலாத அளவுக்கு உறைபனி நிலையைக் கொண்டிருக்கவில்லை. குளிர்மிகுந்த காஷ்மீர் போன்ற பகுதிகளில் மக்கள் வாழக் காரணம் அங்கு நிலவும் பருவநிலைக்கு ஏற்றவாறு தம்மை மாற்றிக்கொண்டதேயாகும். இதைத் தவிர,*

### ஆசியாவின் இத்தாலி இந்தியா

*புவியியலாளர்கள் இந்தியாவை இத்தாலி நாட்டோடு ஒப்பிடுகின்றனர். ஐரோப்பாவிலுள்ள இத்தாலி, ஒரு தீபகற்ப நாடாகும். அந்நாட்டின் கிழக்கே எரித்திரியன் கடலும், மேற்கே தஸ்கான் கடலும், தெற்கே நன்னிலக் கடலும், வடக்கே அபினைன் மலைத் தொடரும் உள்ளது. இத்தாலியின் தெற்கே சிசிலித் தீவு உள்ளதுபோல இந்தியாவின் அருகில் இலங்கைத் தீவு உள்ளது.*

இந்தியாவின் வேறு எந்தப் பகுதியிலும் மக்களின் அன்றாடச் செயல்களைப் பாதிக்கும் நிலையில் காலநிலையில்லை எனலாம். இவ்வாறு மனிதன் வாழச் சாதகமான பருவநிலைகளைக் கொண்ட நாடு இந்தியா எனலாம்.

ஒருநாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அந்நாட்டின் பருவநிலையே அடிப்படையாகும். இந்தியாவில் வளமான கடற்கரைகள் அயல்நாட்டு வாணிகத்திற்கும், செழிப்பான சமவெளிகள் உள்நாட்டு வாணிகத்திற்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் காரணமாகின்றன. ஒவ்வொரு நிலப்பகுதியும் அமைவிட அமைப்பில் வேறுபட்டுள்ளது என்றாலும், பொருளாதார வளர்ச்சிக் குறியீடு சீராகவே உள்ளது.கேரள நிலப்பகுதியில் மிளகு உள்ளிட்ட பிற வாசனை பொருள்களும், மேற்கு வங்காளம், தமிழ்நாடு போன்ற நிலப்பகுதியில் நெல்லும், குஜராத், மகாராஷ்டிரா பகுதியில் பருத்தியும், பஞ்சாபில் கோதுமையும், மத்தியபிரதேசத்தில் பருப்பு வகைகளும், அஸ்ஸாமில் தேயிலையும், கர்நாடகாவில் காப்பியும் அதிகமாகப் பயிரிடப்படுகின்றன. இவைகளே இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிகின்றன.



அஸ்ஸாம் – தேயிலை

பீடபூமிகள் என்பவை மழை குறைந்த உயர் நிலங்களாகும். இப்பகுதியில், கனிம வளங்களும் சில வேளாண் பொருட்களும் விளைகின்றன. சோட்டாநாக்பூர் பீடபூமியில் கனிம வளங்களும், மாளவ பீடபூமியில் தினைப் பொருட்களும், தக்காண பீடபூமியில் பருப்பு வகைகளும், எண்ணெய் வித்துக்களும் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன.

## இன வேறுபாடு

இந்தியாவில் ஆரியர்களது வருகைக்கு முன்னரே, சிந்து நதிக்கரைப் பகுதியில் ஹரப்பா மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் நமக்கு கிடைத்துள்ளன. சிந்து கங்கை சமவெளிகளில் ஆரியர்கள் வாழ்ந்து வந்ததை வேதங்கள் கூறுகின்றன. சங்ககால இலக்கியங்கள், தமிழர் பண்பாடு மிகவும் தொன்மையானது என்று தெரிவிக்கின்றன. இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் பாரசீகர்கள், கிரேக்கர்கள், சாகர்கள், குஷாணர்கள், ஹுணர்கள் ஆகியோர் குடியேறினர். கி.மு 5 ஆம் நூற்றாண்டிலேயே இந்தியா பல இனங்களையும் அதிக மக்கள் தொகையையும் பெற்றிருந்தது என்று வரலாற்றின் தந்தை **ஹெரோடோட்டஸ்**(Herototutus) குறிப்பிடுகிறார். இடைக்கால இந்திய வரலாற்றில் அரேபியர்களும், துருக்கியர்களும், மங்கோலியர்களும்,

### இந்திய இனங்கள்

1. காஷ்மீர், பஞ்சாப், இராஜபுதனம் ஆகிய பகுதியில் உள்ளவை. இந்தோ – ஆரிய இனம்.
2. தமிழகம், ஆந்திரம், மைய மாநிலங்கள், சோட்டா நாக்பூர் பகுதிகளிலும் வாழும் திராவிட இனம்.
3. அஸ்ஸாம் நேபாள எல்லையில் வாழும் மங்கோலிய இனம்.
4. ஐக்கிய மாநிலங்கள், பீகார் பகுதிகளில் வாழும் ஆரிய-திராவிட இனம்
5. வங்காளம், ஒட்டரதேசம் (ஒடிசா) பகுதியில் வாழும் மங்கோல் – திராவிட இனம்.
6. மராட்டியப் பகுதியில் வாழும் மக்கள் சிந்திய – வடமேற்கு எல்லைபுறத்தில் வாழும் துருக்கிய – இரானிய இனம்

முகலாயர்களும் இந்தியாவிற்கு வந்து ஆட்சி செய்தனர். நவீனகால இந்திய வரலாற்றில் போர்ச்சுகீசியர், டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள், பிரெஞ்சுகாரர்கள் முதலியோர் இந்தியாவில் வணிகநோக்கில் குடியேறினர். இதன் அடிப்படையில், **டாக்டர் வின்சென்ட் ஆர்தர் ஸ்மித்**(Vincent Arthur Smith) இந்தியாவைப் **பல "இனங்களின் அருங்காட்சியகம்"** என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் வாழும் பல்வேறு இனங்களைச் சேர்ந்த மக்களின் வாழ்வியல் நெறிமுறைகளே இந்தியப் பண்பாட்டிற்கான அடித்தளத்தைத் தீர்மானிக்கின்றன. இதன் அடிப்படையிலேயே வலிமையான பண்பாடு கட்டமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வோர் இனமும் தனக்கேயுரிய தனித்தன்மையைக் கொண்டுள்ளதால், இந்தியா வேற்றுமையில் ஒற்றுமை காணும் நாடாகத் திகழ்கிறது.

இந்தியாவில் மலைவாழ் பழங்குடியினமக்களின் பண்பாட்டுப் பாரம்பரியம், தொன்மையான வரலாற்றைப் பிரதிபலிக்கின்றது. அவர்கள் கொண்டாடும் விழாக்கள் அவர்களின் பாரம்பரியத்தை வெளிப்படுத்துகின்றன. அவர்களின் உழைப்பும், திறனும் பிறருக்கு வியப்பூட்டும் வகையில் அமைந்துள்ளன. தோடர்கள், இருளர்கள், குறும்பர்கள் போன்ற பழங்குடியின மக்கள் தமிழகத்தின் தொன்மையின் அடித்தளமாக உள்ளனர். இம்மக்களின் பொருளாதார நிலைக்கும் மற்ற மக்களின் பொருளாதார நிலைக்கும் வேறுபாடுகள் உள்ளன.



பழங்குடியினர்

## மொழி வேறுபாடுகள்

மொழி என்பது, மனிதன் தமது உள்ளத்து உணர்வுகளைப் பிறருக்கு உணர்த்த உதவும் மிகச்சிறந்த ஒரு கருவியாகும். இதனையே language is the vehicle of communication என்று **அபெர் குரோம்பி** (Aber crombie) குறிப்பிடுகிறார். பேச்சும், எழுத்தும் மனித குலத்திற்குக் கிடைத்த மிகப்பெரிய கொடையாகும். மனிதருடைய மொழிகளில், ஒவியம், கை அசைவும் குறியீடுகளாகப் பயன்படுகின்றன. இவ்வாறான ஒலிகளை எழுத்து வடிவமாக மாற்ற முடியும் – ஆனால், சைகைகளை அவ்வாறு மாற்ற முடியாது. மனிதருடைய மொழிகளில் இக்குறியீடுகள் சொற்கள் என்றும், அவற்றைக் கையாளுவதற்கான விதிகள், இலக்கணங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.

**உங்களுக்குத் தெரியுமா?**

நம் நாட்டின் 2011-ஆம் ஆண்டில் மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, மொத்த மக்கள்தொகை 121 கோடிக்கு மேல் உள்ளது. இவர்கள் 780க்கும் மேற்பட்ட மொழிகளை பேசி வருவதாக PLSI (People's Linguistic Survey of India) தெரிவிக்கிறது. இக்கணக்கெடுப்பு 2010க்கும் 2013க்கும் இடையில் எடுக்கப்பட்டது. 1961 ஆம் ஆண்டில் தோராயமாக 1650 மொழிகள் இருந்ததாகவும் ஒவ்வோர் ஆண்டிற்கும் பத்திற்கு மேற்பட்ட மொழிகள் அழிந்துவருவதாகவும் இந்நிலை தொடர்ந்தால் இன்னும் நூறு ஆண்டுகளுக்குப் பிறகு, இந்த எண்ணிக்கை ஐந்நூறுக்கும் குறைவாகலாம் என்று இக்கணக்கெடுப்பு தெரிவிக்கிறது.

இந்திய மக்கள் பல்வேறு மொழிகளைப் பேசுகின்றனர். ஒரு லட்சத்திற்கும் மேலான மக்கள் பேசும் மொழிகள் 33 உள்ளன. பழங்காலத்தில் இந்தியாவின் பல பகுதிகளில் பிராகிருத மொழியும், சமஸ்கிருத மொழியும் பயன்படுத்தப்பட்டன. சமஸ்கிருத மொழி வடஇந்திய மொழிகளின் தாயாகக் கருதப்படுகிறது. சமஸ்கிருதம் மற்றும் வடஇந்திய மொழிகளை எழுத **தேவநாகரி** என்னும் எழுத்து வடிவம் பயன்படுத்தப்படுகிறது. இந்தி,மராத்தி, குஜராத்தி, பஞ்சாபி, காஷ்மீரி,

உருது மற்றும் வங்காளம் ஆகியவை வடஇந்தியாவில் பேசப்படும் முதன்மையான மொழிகளாகும். வடகிழக்கு இந்தியாவில் அஸ்ஸாமி மொழி பேசப்படுகிறது. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகள் தென்னிந்தியாவில் பேசப்படும் முதன்மையான மொழிகளாகும். பழங்குடி மக்கள் பேசும் பல மொழிகளுக்கு எழுத்துவடிவம் இல்லை. ஆங்கிலேயரின் இருநூறு ஆண்டுகால ஆட்சிக்குப் பின்னர், இந்தியாவில் ஆங்கில மொழி பொதுவான இணைப்பு மொழியாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இத்தனை மொழிகள் இருப்பினும் 22 மொழிகள் மட்டுமே இந்திய அரசால் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட மொழிகளாகும்.

மனிதப் பண்பாட்டில் மொழி என்பது ஓர் இணைப்புக் கருவியாக பயன்படுகின்றது. ஏனெனில் மொழிதான் ஒருவருக்கு ஒருவர் கருத்தினைப் பரிமாறிக் கொள்ளும் கருவியாகப் பயன்படுகிறது. இந்தியாவில் தேசிய மொழி, இணைப்பு மொழி, வட்டார மொழி போன்றவை பேசப்படுகின்றன.

மொழி, அதைப் பேசுகின்ற இனத்தின் அறிவியல், கலை, வரலாறு, சமூகநிலை, பழக்க வழக்கங்கள், ஒழுக்க நெறிகள் மற்றும் எண்ணங்கள் போன்ற பல வாழ்வியல் கூறுகளையும் பண்பாட்டு நிலைகளையும் தீர்மானிக்கிறது.

உங்களுக்குத் தெரியுமா?

**இந்திய மொழிகள்**

இந்திய அரசியலமைப்பில் 22 மொழிகள் அட்டவணை மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அவை 1. அஸ்ஸாமி 2. பெங்காலி 3. போடோ 4. டோக்ரி 5. குஜராத்தி 6. இந்தி 7. கன்னடம் 8. காஷ்மீரி 9. கொங்கணி 10. மைதிலி 11. மலையாளம் 12. மணிப்பூரி 13. மராத்தி 14. நேபாளி 15. ஒரியா 16. பஞ்சாபி 17. சமஸ்கிருதம் 18. சாந்தலி 19. சிந்தி 20. தமிழ் 21. தெலுங்கு 22. உருது ஆகியவையாகும். இம்மொழிகளில் தமிழ்மொழியே மிகவும் பழைமையானதாகும்.

வட இந்திய மொழிகள் பல இந்தோ – ஆரிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை. பஞ்சாபி, சிந்தி, ஹிந்தி, உருது, குஜராத்தி, வங்காளம், ஒரியா காஷ்மீரி, சமஸ்கிருதம் போன்ற மொழிகளை இந்திய மக்கள் பெரும்பான்மையினர் பேசுகின்றனர். உயர்கல்வி நிலையில் பெரும்பாலும் ஆங்கிலம் பயிற்று மொழியாக உள்ளது. ஆங்கிலம் தவிர பிரெஞ்சுமொழி பாண்டிச்சேரியிலும், போர்த்துக்கீசியமொழி கோவாவிலும் பேசப்படுகின்றன. இவ்வாறு நம்நாட்டில் பல்வேறுபட்ட மொழிகளைக் காணமுடிகிறது.

## சமய வேறுபாடு

இந்திய மக்கள்தொகை கணக்கெடுப்பு 2011–இன்படி இந்தியாவின் மொத்த மக்கள்தொகை 121.09 கோடி எனவும், இதில் 79.80% இந்துக்களும், 14.23% இஸ்லாமியர்களும், 2.30% கிருத்துவர்களும், 1.72% சீக்கியர்களும், 0.07% பௌத்தர்களும், 0.37% சமணர்களும் இந்தியாவில் வாழ்வதாக புள்ளி விவரம் தெரிவிக்கிறது. இந்தியாவில் வாழும் மக்கள் அனைவரும் பல்வேறு சமயங்களைப் பின்பற்றி வருகின்றனர். இந்து, பௌத்தம், சமணம், இஸ்லாம், கிறித்துவம், சீக்கியம் மற்றும் பார்சியம் போன்ற சமயங்கள் இந்திய மக்களால் பின்பற்றப்படுகிறது. இவற்றில் இந்து சமயம், பௌத்த சமயம், சமண சமயம் மற்றும் சீக்கிய சமயம் ஆகிய நான்கு சமயங்களும் இந்தியாவில் தோன்றியவையாகும்.



சமயச் சின்னங்கள்

மக்கள் தொகை அடிப்படையில் ஜம்மு – காஷ்மீரில் இஸ்லாமிய சமயத்தைச் சார்ந்தவர்கள் அதிக அளவில் வாழ்கின்றனர். அருணாச்சலப் பிரதேசம், மிசோரம், மேகாலயா போன்ற வடகிழக்கு மாநிலங்களில் கிறித்துவ சமயத்தவர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். பஞ்சாப் மாநிலத்தில் சீக்கியர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். மற்ற மாநிலங்களில் இந்துக்கள் பெரும்பான்மை சமயத்தவராக வாழ்கின்றனர். அவரவர் சமயத்திற்கான வழிபாட்டுத் தலங்களை அமைத்துக்கொண்டும், திருவிழாக்களைக் கொண்டாடியும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர்.

## சமுதாய அமைப்பில் வேற்றுமைகள்

வட இந்திய மக்களின் வாழ்க்கை முறையில் இருந்து தென்னிந்திய மக்களின் வாழ்க்கைமுறை வேறுபட்டுள்ளது. ஒவ்வொரு மாநிலத்திலும் உணவு, உடை, அணிகலன்கள், பழக்க வழக்கங்கள் போன்றவை மாறுபட்டு இருப்பதைக் காண்கிறோம். ஆடை அணிகலன்கள் அணியும் முறை, உணவு முறை ஆகியவற்றில் வேற்றுமைகள் காணப்படுகின்றன.

## பொருளாதார வேற்றுமைகள்

உலகளவில் பொருள்களை வாங்கும் திறன் அடிப்படையில் நான்காவது இடத்தில் இந்தியா உள்ளது. நிலத்தின் தன்மைக்கேற்பப் பயிர்கள் விளைகின்றன. பஞ்சாப் மாநிலத்தின் பொருளாதார நிலையையும் அதன் வளர்ச்சி, சமநிலை, வீழ்ச்சி ஆகியவற்றைக் கோதுமையின் உற்பத்தியே தீர்மானிக்கிறது. அதேபோல் மேற்கு வங்காளத்தில் நெல்லும் சணலும், குஜராத், மகாராஷ்டிரா மாநிலங்களில் பருத்தியும், மத்தியப்பிரதேசம், கர்நாடகா போன்ற மாநிலங்களில் பருப்பு வகைகளும், எண்ணெய் வித்துக்களும், கேரளாவில் வாசனைத் திரவியங்கள் போன்றவை அந்தந்த மாநிலங்களின் பொருளாதார வளங்களைத் தீர்மானிக்கின்றன. ஒரே விதமான வேளாண்பயிர்கள் இந்தியா முழுமைக்கும் விளைவிக்கப்படுவதில்லை. பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் **கலப்புப்பொருளாதாரக் கொள்கையைப்** பின்பற்றும் நாடாக இந்தியா திகழ்கிறது. இப்பொருளாதாரக் கொள்கை அரசு, மற்றும் தனியார் துறைகளின் பங்கெடுப்பைக் குறிப்பிடுகிறது. தனிநபர் வருமானமே ஒரு குடும்பத்தின் பொருளாதார வளர்ச்சியைத் தீர்மானிக்கிறது. அவ்வடிப்படையில் மக்களிடையே பொருளாதார அடிப்படையில் ஏழை, பணக்காரன், முதலாளி, தொழிலாளி என்ற வேற்றுமைகள் நிலவுகின்றன.

## ஒற்றுமைக் கூறுகள்


## நிலவியல் அமைப்பில் ஒற்றுமை

ஆசியக் கண்டத்தின் மத்திய தென்பகுதியில் அமைந்த நாடு இந்தியா. இது வடக்கு தெற்காக 3214 கிலோ மீட்டர் நீளமும், கிழக்கு மேற்காக 2933 கிலோ மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. இந்தியாவின் நிலவியல் அடிப்படையில் சமவெளி நிலங்கள் (விவசாய நிலங்கள்) மிகுதியாக உள்ளன.

அயல்நாட்டவர்கள் இந்திய நிலப்பகுதிகளை ஒரே நாடாகக் கருதி வந்தனர். 'ஹிந்த்' என்ற பெயர் 'சிந்து' என்ற நதியின் பெயரிலிருந்து பெறப்பட்டது. கிரேக்கர்கள் முதன்முதலில் அறிந்த பகுதி சிந்து நதி பாயும் பகுதி என்பதால் இத்துணைக் கண்டத்தை 'சிந்து' என்று அழைத்தனர். தொடக்கக்காலத்தில் பாரசீக, கிரேக்கப் படையெடுப்புகளின் விளைவால் இந்தியா, இந்துஸ்தானம் என்ற பெயர்கள் உருவாயின. **சிந்து** என்பதை அவர்கள் 'ஹிந்து' என்று உச்சரித்தார்கள். இதனைத் தொடர்ந்து இடைக்காலத்தில் வந்த அரேபியர்களும் நமது நாட்டை **'ஹிந்துஸ்தான்'** என்று அழைத்தனர் .

நிலவியல் கூறுகளின் அடிப்படையில் அத்தகைய வேற்றுமைகள் காணப்படினும், புராண காலந்தொட்டே நமது நாடு **"பாரத நாடு"** என்ற பெயரினைக் கொண்டுள்ளது. வடஇந்தியாவையும், தென்னிந்தியாவையும்

விந்திய சாத்பூரா மலைத்தொடர்கள் பிரித்தாலும் இந்தியாவைப் **பாரதக் கண்டம்** என்றே வழங்குகிறோம். இதன் அடிப்படையில் தான் பாரத நாட்டை, பாரத மாதாவாக அனைவரும் கொண்டாடுகிறோம்.



விந்திய சாத்பூரா மலைத் தொடர்கள்

## அரசியல் ஒற்றுமை

பண்டைய தமிழர்கள் பண்பாட்டில் சிறந்து விளங்கினர் என்பதைச் சங்க கால இலக்கியங்களாகிய எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் உணர்த்துகின்றன. இந்தியாவின் பழைமையான, உயர்வான பண்பாடே, அதன் ஒற்றுமைக்கும் வரலாற்றிற்கும் பின்னணியாக அமைந்துள்ளது. அக்காலத்தில் சாதி, சமய வேற்றுமைகள் காணப்பட்டாலும் அந்நியர்களை எதிர்ப்பதில் இந்தியர்கள் ஒன்றுபட்டனர். இதன் காரணமாக அரசியல் மற்றும் பண்பாட்டு ஒற்றுமை இந்திய தேசத்தை வலிமைமிக்க தேசமாக்கியது என்று ஜவஹர்லால் நேரு தான் எழுதிய 'Discovery of India' என்ற நூலில் கூறியுள்ளார். மன்னர்கள் இந்தியா முழுமைக்கும் வெற்றி கொண்டு ஆட்சி செய்தமையால் இராஜாதிராஜன், அதிராஜன், ஏக்ராட், சாம்ராட் போன்ற பட்டங்களைப் பெற்றுச் சீரும் சிறப்புமாக ஆட்சிபுரிந்தமையை அறிய முடிகிறது. மௌரியப் பேரரசில் அசோகர், முகலாயப் பேரரசர்களில் அக்பர், ஔரங்கசீப் போன்றோர் இந்தியா முழுமைக்கும் ஒரே மத்திய நிர்வாக அமைப்பை ஏற்படுத்தினார்கள். நாடு முழுமைக்கும் பொதுவான சட்டங்கள், பொது நாணயங்கள், அலுவலக மொழியாக பாரசீக மொழி, நீண்ட நெடுஞ்சாலைகள் போன்றவற்றை உருவாக்கி, இந்தியா முழுமைக்கும் அரசியல் ஒற்றுமையை நிலைநாட்டினார்கள். ஆங்கிலேயர்கள் நாடுமுழுமைக்கும் பொதுவான இரயில்பாதை, தபால் தந்தித் துறையை ஏற்படுத்தி ஒற்றுமை உணர்வை வளர்த்தனர்.



மாமன்னர் அசோகர்

## சமய ஒற்றுமை

சமயங்களின் அடிப்படையில் கொண்டாப்படும் **திருவிழாக்கள்** மக்களை இந்தியர்களாக ஒன்றிணைக்கின்றன. சமயவேறுபாடுகளை மறந்து மக்கள் ஒவ்வொருவரும் தங்களுக்குள் வாழ்த்துகளைப் பரிமாறிக்கொள்கின்றனர். சமய விழாக்களைக் கொண்டாட, சமயங்களைக் கடந்து உதவி செய்கின்றனர். சமத்துவம், சகோதரத்துவம், தேசப்பற்று போன்றவற்றை மக்களிடையே பரப்பும் கருவிகளாக திருவிழாக்கள் திகழ்கின்றன. சமய விழாக்கள் மட்டுமின்றி பண்பாடு அடிப்படையில் கொண்டாடப்படும் விழாக்களும் மக்கள் மனதில் ஒற்றுமையை விதைக்கும் காரணிகளாகத் திகழ்கின்றன. கிராமியவிழாக்கள்,சமயங்களின்அடிப்படையில் இருந்தாலும், பண்பாட்டு வகையிலான ஒற்றுமையை மக்கள் மனதில் விதைக்கின்றன. பஞ்சாப் மாநிலத்தில் நடைபெறும் **குருநானக் ஜெயந்தி**, தமிழ்நாட்டில் **நாகூர் தர்காவில்** நடைபெறும் **கந்தூரி விழா, வேளாங்கண்ணி மாதா ஆலயக் கொடியேற்றவிழா, சிக்கல் சிங்காரவேலர் ஆலயக் கந்தசஷ்டிவிழா** போன்றவற்றில் சமயங்களைக் கடந்து அனைத்து சமயத்தவருமே கலந்து கொள்கின்றனர்.

## சமய விழாக்கள்

இந்தியாவில் பல்வேறு விழாக்கள், சமயங்கள் அடிப்படையில் ஒற்றுமையுடன் கொண்டாப்பட்டு வருகின்றன. இந்து சமயத்தவர் தீபாவளி, நவராத்திரி, சித்திரைத் திருவிழா, ஸ்ரீஇராமநவமி, வைகுண்டஏகாதசி, விநாயகர்சதுர்த்தி, மகாசிவராத்திரி, கும்பமேளா, மாசிமகம், தைப்பூசம், கார்த்திகைதீபம், கிருஷ்ணஜெயந்தி போன்ற

விழாக்களைக் கொண்டாடுகின்றனர். தமிழகத்தில் கொண்டாடப்படும் பொங்கல்விழா வடஇந்தியாவில் மகரசங்கராந்தி என்ற பெயரில் கொண்டாடப்படுகிறது.

கிறித்துவர்கள், கிறிஸ்துமஸ் விழாவைக் கொண்டாடுகின்றனர். இஸ்லாமியர்கள் மிலாடி நபி, ரம்ஜான், பக்ரீத் போன்ற பண்டிகைகளையும், பௌத்தர்கள் புத்தபூர்ணிமா, சமணர்கள் மகாவீர்ஜெயந்தி, சீக்கியர்கள் குருநானக்ஜெயந்தி போன்ற விழாக்களையும் கொண்டாடுகின்றனர். இவ்விழாக்களைக் கொண்டாடும் அனைத்து சமய மக்களும், தூய அன்பு, சகிப்புத் தன்மை, உண்மையான பக்தி ஆகியவற்றின் மூலம் இறைவனை அடைய முடியும் என்று



கந்த சஷ்டி விழா



கந்தூரி விழா



வேளாங்கண்ணி

நம்புகின்றனர். இத்தகைய விழாக்களை ஒற்றுமையுடனும், மகிழ்ச்சியாகவும் அனைவரும் கொண்டாடுவதால் **இந்தியா சமய சார்பற்ற நாடு** என்பதை உலகிற்கு நிலைநாட்டுகிறது.


இந்தியாவிலுள்ள சமயங்களில் **ஒருகடவுள்** கோட்பாடு, **ஆன்மாவின் அழியாத்தன்மை, அவதாரக் கோட்பாடுகள், கர்மவினைக்** கோட்பாடுகள், **வீடுபேறு** போன்ற எல்லா நிலைகளிலும் இந்தியச் சமயங்கள் ஒத்திருப்பதை அறிய முடிகிறது. சமயச்சடங்குகளிலும், பழக்கவழக்கங்களிலும் அடிப்படையான தன்மைகள் ஒன்றாகவே உள்ளன. தென்னிந்தியர்கள் வடக்கே உள்ள காசிக்கு புனிதப்பயணம் மேற்கொள்வதும், **வட இந்தியர்கள் தெற்கே உள்ள இராமேஸ்வரத்திற்குப் புனிதப்பயணம் மேற்கொள்வதும், நமது நாட்டின் சமய மற்றும் பண்பாட்டு ஒற்றுமையை வெளிப்படுத்துகிறது.**

வைதீக சமயநெறியில் சிவன், விஷ்ணு போன்ற கடவுளர்களை வணங்குவதும் இராமாயணம், மகாபாரதம் போன்ற வீரகாவியங்களைப் போற்றுவதும், வேதங்கள், பகவத்கீதை, புராணங்கள் போன்றவற்றைப் புனிதமாகக் கருதுகின்ற மனநிலை இந்தியா முழுமைக்கும் ஒன்றாகவே உள்ளது.

இந்துக்கள், தர்காவிற்கும் தேவாலயத்திற்கும் சென்று வழிபடுவது இந்தியாவின் சமய ஒற்றுமையைக் காட்டுகிறது. இந்திய மக்கள் பிற சமய மக்களின் நம்பிக்கைளை மதித்து, ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி, ஒற்றுமையுடன் வாழ இந்திய அரசியலமைப்புச் சட்டம் வழிவகை செய்கிறது. பிற சமய மக்கள், தங்களுக்குரிய இறைவழிபாட்டுத் தலங்களை அமைத்துக்கொண்டு வழிபடவும், உரிமை வழங்குகிறது. சமயமும், சமயத்திருவிழாக்களும் மக்கள் மனதில் அறநெறிப்பண்புகளையும், ஒழுக்கநெறிகளையும் வளர்க்கின்றன.

## இலக்கியம்

இந்தியா **இலக்கியங்களின் கருவூலமாகத்** திகழ்கிறது. வேதங்கள்,



காசி



இராமேஸ்வரம்

மகாபாரதம், இராமாயணம், பகவத்கீதை, விவிலியம், திருக்குரான் மற்றும் திருக்குறள் போன்ற நூல்கள் பிற இந்திய மொழிகளிலும் கிடைக்கப்பெறுகின்றன. காளிதாசரின் மேகதூதம் மற்றும் சாகுந்தலம் ஆகிய நூல்கள் இந்தியாவின் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. சங்கரர், இராமானுஜர், கபீர், குருநானக் மற்றும் சைதன்யர் போன்றோர்களால் எழுதப்பட்ட தத்துவ கோட்பாடுகள் இந்தியா முழுமைக்கும் பின்பற்றப்பட்டு வருகின்றன.

### அறுவடைத் திருவிழாக்கள்

நமது நாடு முழுவதும் விவசாயிகள் கொண்டாடும் அறுவடை திருவிழாக்கள் நமது பழைமையான நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கங்கள், தேசிய ஒருமைப்பாடு ஆகியவற்றை உலகிற்கு எடுத்தியம்புகின்றன. தமிழகத்தில் பொங்கல் விழா அறுவடைத் திருவிழாவாகக் கொண்டாடப்படுவது போன்று கர்நாடகா, குஜராத், மகாராஷ்டிரா, பீகார் ஆகிய மாநிலங்களில் மகரசங்கராந்தியாகவும், கேரளாவில் ஓணம் பண்டிகை, மத்திய பிரதேசத்தில் லொஹரி, பஞ்சாபில் பைசாகி, அசாமில் போஹாலி பிஹு, வங்காளத்தில் நபன்னா என்று பல்வேறு பெயர்களிலும் அறுவடை திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன.

ஆழ்வார்களின் பாடல் தொகுப்பான நாலாயிரத்திவ்யப்பிரபந்தமும் நாயன்மார்களின் தேவாரப்பாடல்களும் தொடர்ந்து பாடப்பட்டு வருகின்றன. இத்தகைய இலக்கியப் படைப்புகள், இந்தியர்களிடையே ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டினையையும் வளர்க்கின்றன. எனவேதான், இந்தியா இலக்கியங்களின் கருவூலமாக திகழ்கின்றது.

### பண்பாட்டில் ஒற்றுமை

இந்தியாவில் பல்வேறு இனத்தைச் சார்ந்த மக்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்து வேற்றுமையில் ஒற்றுமை என்ற உயரிய பண்பாட்டை உலகறியச் செய்துள்ளனர். பண்பாடு என்பது ஒட்டு மொத்த மக்களின் பண்பட்ட சமுதாயத்தின் விளைவேயாகும். மொழி, இலக்கியம், சமயம், தத்துவம், நடைமுறைகள், மரபுகள், பாரம்பரியம், நம்பிக்கைகள், ஒழுக்கக்கோட்பாடுகள், நுண்கலைகள் மற்றும் கட்டடக்கலையின் வாயிலாக பண்பாட்டில் ஒற்றுமையை உணரமுடிகிறது. எனவே பண்பாடு என்பது பன்முகத்தன்மை வாய்ந்த வாழ்க்கையின் நெறிமுறையாகும்.

இந்தியப்பண்பாட்டை வெளிப்படுத்தும் இலக்கியங்களில், ஓரே சீரான பண்பாட்டுக் கூறுகள், சிந்தனைகள் இருப்பதைக் காணமுடிகிறது. நமது நாட்டிலுள்ள அனைத்து சமயத்தினரும் அவரவருக்குரிய பண்டிகைகளைக் கொண்டாடுவதன் மூலம், பண்பாட்டு ஒற்றுமையை வெளிப்படுத்துகிறோம். இப்பண்பாடு, பல மாற்றங்களைக் கடந்து வந்தாலும் விட்டுக்கொடுத்தல், வந்தோரை வாழவைத்தல், சகிப்புத்தன்மை போன்ற பண்புகளால் இன்றுவரை சிதைவுறாமல் வளர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

## பழக்கவழக்கங்கள் மற்றும் பாரம்பரியம்

இந்தியப் பாரம்பரியம் மற்றும் பழக்கவழக்கங்கள் மிகவும் தொன்மையானவை. இது இனம், சமயம், மொழி போன்ற வேறுபாடுகளைக் கடந்தது, மேலும் விருந்தோம்பல், ஈகை, நட்பு, அன்பு, பொதுநலம், நீதி, நன்னடத்தை, உண்மை, அமைதி, சமயநம்பிக்கை, உயிரிரக்கம், பெரியோரைப் போற்றுதல், பெற்றோர், ஆசிரியர்களை மதித்தல், சகிப்புத்தன்மை போன்ற பின்பற்றத்தக்க உயரிய நற்பண்புகளை வலியுறுத்துகின்றன. மேற்கூறிய நற்பண்புகள் யாவும் நமது பழக்கவழக்கங்களையும் பண்பாட்டினையும் பாதுகாக்க உதவுகின்றன.

## கலை மற்றும் கட்டடக்கலை

இந்தியக் கட்டடக்கலையின் வளர்ச்சி பெரும்பாலும் சமயத் தொடர்புடையதாகும். பல்லவர்காலத்து மாமல்லபுரச் சிற்பங்கள் காஞ்சி கைலாசநாதர் கோயில், வைகுந்த பெருமாள் கோயில், தஞ்சை பீரகதீஸ்வரர் கோயில், மதுரை மீனாட்சியம்மன் கோயில், திருவரங்கம் அரங்கநாதர் கோயில், திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில், போன்றவை பழங்கால தென்னிந்திய கட்டடக்கலைக்குச் சிறந்த சான்றுகளாகும்.

வடஇந்தியாவில் முதன்முதலாக ஸ்தூபி என்ற கட்டட அமைப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. சாஞ்சி, சாரநாத் உள்ளிட்ட பல இடங்களில் பழைமையான ஸ்தூபிகள் காணப்படுகின்றன. பாரசீகக் கட்டடப்பாணியில் மசூதிகள் கட்டப்பட்டன. பூரி ஜெகநாதர் கோயில், கோனார்க் சூரியனார் கோயில், காசி விஸ்வநாதர் கோயில், காஷ்மீரில் உள்ள வைஷ்ணவதேவி கோயில், தாஜ்மஹால், டெல்லி செங்கோட்டை போன்றவை வடஇந்தியக் கட்டடக்கலைக்கு சிறந்த சான்றுகளாகும்.

வடஇந்தியாவில் இந்துஸ்தானி இசையும், தென்னிந்தியாவில் கர்நாடக இசையும் மக்களை ஒன்றிணைக்கும் கருவிகளாகத் திகழ்கின்றன. ஒவ்வொரு மாநிலத்திற்கும் உரிய நடனங்கள் வேறுபட்டாலும் அவை இந்தியர் என்ற ஒருமைப்பாட்டை வலியுறுத்துகின்றன.



சூரியனார் கோயில் – கோனார்க்

## மொழி ஒற்றுமை

நமது நாட்டில் பல்வேறு மொழிகள் பல்வேறு மாநிலங்களில் வாழும் மக்களால் பேசப்படுகின்றன. ஒவ்வொரு மொழிக்கும் அதற்கென தனியாக இலக்கண, இலக்கிய மொழி வளம் உண்டு. மொழிகள், பேசும் விதத்தால் வேறுபட்டாலும், நமது நாட்டின் பழைமையான பண்பாட்டையும் மக்களின் உணர்வுகளையும் பிரதிபலிக்கும் கருவியாகப் பயன்படுகின்றன. பாலி, பிராகிருதம், சமஸ்கிருதம் போன்ற மொழிகள், பழங்கால வடஇந்திய மக்களால் பேசப்பட்டன. தென்னிந்தியாவிலும் இம்மொழிகள் சமண, பௌத்தத் துறவிகளால் பரப்பப்பட்டன. இம்மொழிகளில் எழுதப்பட்ட இலக்கியங்கள் அறக்கோட்பாடுகளையும், மனிதப்பண்புகளையும் வலியுறுத்தின.

### செவ்வியல் சிறப்பு

தொன்மை, தனித்தன்மை, மொழிகளின்தாய், சொல்வளம், இலக்கிய இலக்கண வளம், சிந்தனைவளம், கலைவளம், பண்பாட்டுவளம் இவற்றுடன் பன்னாட்டு மொழியாக விளங்கும் தன்மையைப் பெற்ற மொழியே **செவ்வியல்மொழி** எனப்படும்.

இதே காலக்கட்டத்தில் தமிழ் மொழியிலும் அறம், பொருள், இன்பம், வீடு

ஆகிய நற்கருத்துகளை வலியுறுத்தும் இறவாப்புகழ் கொண்ட எண்ணற்ற இலக்கியங்கள் இயற்றப்பட்டன. திருவள்ளுவரால் இயற்றப்பட்ட திருக்குறள், **உலகப்பொதுமறை** என்று அழைக்கப்படுகிறது. தொல்காப்பியம், தமிழரின் வாழ்வியலை உலகிற்கு உணர்த்துகிறது.

தென்னிந்தியாவில் மூத்த திராவிட மொழியிலிருந்து கன்னடம்,மலையாளம் ஆகிய மொழிகள் தோன்றின. இம்மொழிகளிலும் புகழ்பெற்ற பல இலக்கியங்கள் இயற்றப்பட்டன. இவை தென்னிந்திய மக்களின் பண்பாடு வாழ்வியல் நெறிமுறைகள் போன்றவற்றை உலகிற்கு உணர்த்துகின்றன.

பண்டைய சமஸ்கிருத இலக்கியங்கள் அராபிக் மற்றும் பாரசீக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டன. இந்நிலை மொழிகளுக்கிடையேயான ஒற்றுமையை நிலைநாட்டுகிறது. இந்தியாவின் வானவியல், கணிதம், அறிவியல், தத்துவநூல்களும், மேற்காசிய நாடுகளில் மொழிபெயர்க்கப்பட்டன. ஐரோப்பியரின் வருகைக்குப் பின்னர் ஆங்கிலம் இந்தியாவின் ஆட்சி மொழியாக்கப்பட்டது. திருக்குறள், திருவாசகம் போன்ற ஒப்பற்ற தமிழ் நூல்கள் ஆங்கில மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. இவை உலக மக்களால் விரும்பி படிக்கப்பட்டன. இந்தியரும் ஆங்கில மொழியைக் கற்று மேற்கத்திய தத்துவங்களையும், இலக்கியங்களையும் தங்கள் மொழியில் மொழிபெயர்த்தனர். லிட்டன் பிரபு எழுதிய The Secret Way என்ற நூலைத் தமிழில் '**இரகசிய வழி**' என்ற பெயரில் மனோன்மணியம் சுந்தரனார் மொழிபெயர்த்துள்ளார். இராஜாராம்மோகன்ராய், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் தத்துவங்கள் மேலைநாட்டு மொழிகளில் மொழிபெயர்ப்பானது.

விடுதலைக்குப் பின்னரும் பிறமொழிகளில் உள்ள சிறந்த நூல்கள் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. எனவே இந்தியாவின் பண்பாட்டு வாழ்வியல் முறைகள், புவியியலமைப்பு போன்றவற்றை வெளிப்படுத்திய மொழிகள் அரசியல் ஒற்றுமை ஏற்படவும் வழிவகுத்தன.

## திராவிட மொழிக் குடும்பம்

| தென்திராவிட மொழிகள் | நடுத்திராவிட மொழிகள் | வடதிராவிட மொழிகள் |
|---|---|---|
| தமிழ், மலையாளம், கன்னடம், குடகு, துளு, தோடா, கோத்தா, கொரகா, இருளா. | தெலுங்கு, கோண்டி, கோயா, கூயி, கூவி, கோலாமி, பர்ஜி, கதபா, கோண்டா, நாயக்கி, பெங்கோ, முண்டா. | குருக், மால்தோ, பிராகுய். |

## இலக்கிய ஒற்றுமை

உலக செம்மொழிகளில் ஒன்றான தமிழ் மொழியில் எழுத்தப்பட்ட தொல்காப்பியம், திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னாநாற்பது, பெரியபுராணம், கம்பராமயாணம், சீறாப்புராணம், இயேசு காவியம் போன்ற இலக்கியங்களில் மொழி வளத்தைக் காணலாம். இந்நூல்கள் அறவியல் கோட்பாடுகளை முன்னிறுத்துகின்றன. இராஷ்டிரகூடர்கள் காலத்தில் கன்னட மொழியில் எழுதப்பட்ட கவிராஜமார்க்கம், விஜயநகரப்பேரரசு காலத்தில் தெலுங்கு மொழியில் எழுதப்பட்ட 'ஆமுக்தாமால்யதா' போன்ற இலக்கியங்கள் அந்தந்த மொழிகளின் வளமையை எடுத்து இயம்புகின்றன.

## உடல் அமைப்பில் ஒற்றுமை

ஆரியர்கள், கிரேக்கர்கள், சாகர்கள் ஆகியோர் இந்தியாவின் மீது படையெடுத்தனர். இவர்கள் சிவந்த மேனியையும், நீலமான கண் விழிகளையும் கொண்டிருந்தனர். மிதமான குளிர்ப்பகுதியான வடகிழக்கிந்தியாவில் வாழ்ந்த மக்கள் சிவந்த உடல் அமைப்பையும்,குள்ளமான தோற்றத்தையும் கொண்டிருக்கின்றனர். தென்னிந்தியாவில் வாழும் மக்கள் மாநிற மேனியையும், நடுத்தரமான தோற்றத்தையும் கொண்டிருக்கின்றனர். உடலமைப்பாலும் உணவு மற்றும் பழக்கவழக்கங்களாலும் தாங்கள்

வாழும் பகுதிக்கேற்ப வேறுபட்டிருந்தாலும், இந்தியர் என்ற ஒற்றுமை உணர்வுடன் இந்தியப் பண்பாட்டை பின்பற்றி ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகின்றனர்.

### சமுதாய அமைப்பில் ஒற்றுமை

தொடக்கக் காலத்திலிருந்தே சமுதாய அமைப்பில், தொழில் மற்றும் பொருளாதார அடிப்படையில் வேற்றுமைகள் இருந்தாலும், வாழ்வியலிலும், அதையொத்த பண்பாட்டு நிலைகளிலும் ஒரே மாதிரியான தன்மையையே இந்திய மக்கள் கொண்டிருக்கின்றனர்.பல்வேறு விதமான சமூக வேறுபாடுகள் இருந்தாலும் அவற்றை மறந்து இயற்கைச் சீற்றங்கள் பேரிடர் நிகழும் போது ஒருவருக்கொருவர் தங்களிடையேயான வேற்றுமைகளை மறந்து இந்தியர் என்ற ஒற்றுமையுடன் உதவி செய்து வாழ்ந்து வருகின்றனர்.

சமூகத்தில் தொழில்கள் கட்டமைப்பைப் பொருத்தவரையில் இன்னார்க்கு இன்ன தொழில் என்றநிலை மாறி, யார் வேண்டுமானாலும் எந்தத் தொழிலையும் செய்யலாம் என்ற நிலை வந்துள்ளது. இந்நிலை சமூக ஒற்றுமையைப் பறைசாற்றுகின்றது.

### இந்தியப் பண்பாட்டு ஒற்றுமையை வளர்க்க துணைபுரியும் காரணிகள்

நம்நாட்டின் உயரிய கோட்பாடாகிய 'வேற்றுமையில் ஒற்றுமை' எவ்வாறு மிளிர்கிறது என்பதை அறிந்தோம். இனி ஒற்றுமையை நிலைநாட்டுகின்ற காரணிகளைப் பற்றிக் காண்போம்.

### அரசர்கள்

இந்தியப் பெருநாட்டை ஆட்சிபுரிந்து வரலாற்றில் சிறப்பிடம் பெற்ற பேரரசர்களான அசோகர், சந்திரகுப்தர், சமுத்திரகுப்தர், அக்பர் போன்றவர்களாவர். இவர்கள் மண்ணாசைக் காரணமாக இந்தியாவின் பெரும்பகுதியை வெற்றிகொண்டு ஆட்சி புரிந்தனர். பல்வேறு சிற்றரசுகளை ஒன்றாக இணைத்து இந்தியாவை ஒரே குடையின்கீழ்க் கொண்டுவந்தனர். அரசர்களைத் தொடர்ந்து வீரர்களும் தங்களின் வீரசெயல்களை நிலைநாட்டினர். இவர்களுடைய செயல்களும் நமது பண்பாட்டு ஒற்றுமையை வளர்த்தன என்பதையும் அறியமுடிகிறது.

### ஒரே சீரான நிர்வாகம்



மாமன்னர் அக்பர்

நம்நாட்டை ஆட்சி செய்த மௌரியர்கள், குப்தர்கள், முகலாயர்கள், ஆங்கிலேயர்கள் போன்றோர் தாங்கள் ஆட்சி செய்த காலத்தில் அனைத்து மாகாணங்களையும் ஒன்றிணைத்து, ஒரே சீரான ஆட்சியமைப்பினால் நிர்வாகம் செய்தனர். இந்த சீரிய நிர்வாக அமைப்பு இந்தியாவின் பண்பாட்டு ஒற்றுமைக்கு வித்திட்டது எனலாம்.

### மொழியும் சமயமும்

பழங்காலத்தில் தமிழும், வடமொழியும், தற்காலத்தில் ஆங்கிலமும், இந்தியும், தமிழும் பண்பாட்டு ஒற்றுமையைப் பேணிவளர்க்கத் துணைபுரிகின்றன. இலக்கியங்கள், காப்பியங்கள், புராணங்கள், இதிகாசங்கள் என அனைத்தும் இந்திய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டன. மூலகருத்துக்களைக் கொண்டு தத்தம் பண்பாட்டிற்கேற்ப எழுதப்பட்டன. இராமாயணம் வடமொழியில் வால்மீகி முனிவராலும், இந்தியில் துளசிதாசராலும், தமிழில் கவிச்சக்கரவர்த்தி கம்பராலும் இயற்றப்பட்டதைக் காண்கிறோம். இந்த மூவருமே மூலநூலின் மையக்கருத்து மாறாமல் தத்தம் பண்பாட்டிற்கு இணங்க தொடர்புடைய செய்திகளைக் கூறியுள்ளனர். இவற்றின் மூலம் இந்தியாவில் பண்பாட்டு ஒற்றுமையை நிலைநாட்ட முடிகிறது. உலகிலுள்ள பல்வேறு சமயங்களுக்கும் நிலைக்களனாகத் திகழும் இந்து சமயம் மக்களின் ஆன்மிக வாழ்விலும், அகச்சிந்தையிலும் உயரிய ஒற்றுமையை பேணி வளர்க்க துணைபுரிகின்றன.

## போக்குவரத்தும் செய்தித் தொடர்பும்

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்ட இருப்புப்பாதைகள், தபால், தந்தி முறை, தொலைபேசி, வானொலி, விரைவான தகவல் தொடர்பிற்கு வித்திட்டன. இவையாவும் மக்களின் பயண நேரத்தைக் குறைத்தது. இதனால் மக்கள் பல இடங்களுக்கு எளிதாக சென்று வந்தனர். இவை மக்களின் பண்பாட்டு ஒற்றுமைக்கு வித்திட்டது எனவும் வளர்ந்து வரும் நவீன காலத்தில் அறிவியல் தொழில்நுட்பத்தின் காரணமாக தொலைக்காட்சி, கணினி, மின்னஞ்சல் சேவை, தொலைநகலி, குறுஞ்செய்தி, புலனம் மற்றும் முகநூல் இவற்றின் பயன்பாடுகளை அறிந்து, மேலும் ஒருவருடன் ஒருவர் நெருங்கிய தொடர்பு கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

## வரலாறும் நாட்டுப்பற்றும்


பொதுவாக வரலாற்று மரபுகளை நமது இலக்கியங்கள் மூலம் அறிகிறோம். வரலாற்று மரபுகளை அறிந்து நாமும் நமது பண்பாட்டு ஒற்றுமைக்கு உறுதுணை புரிகிறோம். விடுதலை இயக்க வரலாற்றை அறிந்து நாட்டுப்பற்று மிக்கவர்களாய் வாழ வேண்டும் என்ற உணர்வு மேம்படுகிறது. எனவே பண்பாட்டு ஒற்றுமையை நமது வரலாற்று அறிவு, நாட்டுப்பற்று, தேசிய உணர்வு ஆகியவற்றை வளர்க்கத் துணைபுரிகின்றன.

## பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பேணிக்காத்தல்

**"வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே"** இந்தியரின் அடிப்படைக் கோட்பாடு என்பதை மக்கள் உணர வேண்டும். இதனை எதார்த்தமாய் உணர்ந்து, நாம் நம் ஒற்றுமை உணர்வை போர் மற்றும் இயற்கைப் பேரிடர்களான புயல், வெள்ளம், பூகம்பம் போன்ற இயற்கைச் சீற்றத்தின்போது உலகறியச் செய்கிறோம். இத்தகைய நெருக்கடி காலங்களைத் தவிர்த்து, அமைதி காலத்திலும், அன்றாட வாழ்விலும், அன்பு, அமைதி, சகோதர மனப்பான்மை, ஒற்றுமை, பிற சமயத்தவரை அரவணைத்துச் செல்லும் நல்லிணக்க மனப்பான்மை உடையவராய் வாழ வேண்டும்.

**"பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்"** என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க எவ்வித வேறுபாடும் கருதாமல் அனைவரையும் சமமாகக் கருதி பழக வேண்டும். அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கு கொள்ள வேண்டும். குறிப்பாகத் தன்னால் இயன்ற உதவியை மற்றவர்களுக்குச் செய்ய வேண்டும். பிற சமயத்தவர்களின் உணர்வுகளை மதித்து நடக்க வேண்டும். **"எம்மதமும் சம்மதம்"** என்ற பரந்த, சமய உணர்வு வேண்டும். **"ஒன்றே குலம், ஒருவனே தேவன்"** என்ற உயரிய கோட்பாட்டினை நடைமுறை வாழ்வில் பின்பற்ற வேண்டும்.

நாட்டுப்பற்று மிக்கவராய் 'நாடு நமக்கு என்ன செய்தது என்பதைக் கருதாமல் நாம் நாட்டிற்கு என்ன செய்தோம்' என்ற உணர்வுடன் நாட்டின் நலனுக்குப் பாடுபட வேண்டும். நமது அறிவையும், ஆற்றலையும் நம் நாட்டிற்குப் பயன்படுத்த வேண்டும். உலகின் அனைத்துத் துறைகளிலும் நம்நாடு வளம் வாய்ந்ததாகத் திகழ நாம் ஒவ்வொருவரும் பாடுபட வேண்டும்.


இரவீந்திரநாத் தாகூர்

## தேசியச் சின்னங்கள்

இந்தியாவின் தேசியக் கொடியாக தர்மச்சக்கரத்துடன் கூடிய மூவர்ணக்கொடியும், தேசியப்பாடலாக பக்கிம் சந்திர சட்டர்ஜி இயற்றிய வந்தே மாதரம் என்ற பாடலும், தேசிய கீதமாக


மயில்



புலி



ஆலமரம்

இரவீந்திரநாத் தாகூர் இயற்றிய ஜனகன மன என்ற பாடலும், இந்திய அரசியலமைப்பால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இவை மட்டுமின்றி தேசியப் பறவையாக மயிலும், தேசிய விலங்காக புலியும், தேசிய மரமாக ஆலமரமும் இந்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

TNPSC_PRE_COACHING

## தேசியத் திருவிழாக்கள்

இந்திய தேசிய திருவிழாக்கள், மக்களிடையே சாதி, சமயம், இனம், மொழி, வட்டார வேற்றுமைகளை கடந்து இந்தியர் என்ற ஒற்றுமை உணர்வை ஏற்படுத்துகின்றன. ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 15-ஆம் நாள் கொண்டாடப்படும் சுதந்திர தினவிழா, ஜனவரி 26-ஆம் தேதி கொண்டாடப்படும் குடியரசுதினவிழா, அக்டோபர் 2-ஆம் நாள் கொண்டாடப்படும் தேசத்தந்தை காந்தியடிகள் பிறந்த தினவிழா, நவம்பர் 14-ஆம் நாள் கொண்டாடப்படும் பண்டித ஜவகர்லால் நேருவின் பிறந்தநாள் விழா, ஜனவரி 12-ஆம் நாள் கொண்டாடப்படும் தேசிய இளைஞர் தினவிழா(விவேகானந்தர் பிறந்த நாள்) ஆகியவை இந்தியர் என்ற உணர்வுடன் கொண்டாடப்பட்டு வருகின்றன.

இன்று உலக அரங்கில் வேண்டப்படுவது **'சமாதானம்'** ஆகும். எத்தகைய வேற்றுமைகளுக்கும், உயர்வு, தாழ்வுகளுக்கும் இடம் தராமல், சமாதான உணர்வுடன் விட்டுக்கொடுத்து வாழவேண்டும். 'உலக அமைதியே உயர்வுக்கு வழி' என்பதை அனைவரும் உணர்ந்து அதற்கு அயராது பாடுபடவேண்டும். சமாதான வாழ்விற்கு அடிப்படை சகோதரத்துவ மனப்பான்மையாகும். இவ்வாறாக, நாமும் நம் வேற்றுமைகளைக் களைந்து சகோதர மனப்பான்மையுடன் ஒற்றுமையாக வாழவேண்டும்.



முப்படை அணிவகுப்பு

## நிறைவுரை

புவியியல் அமைப்பு அதனையொட்டிய மக்களின் வாழ்க்கை முறை, பலதரப்பட்ட பழக்கவழக்கங்கள், சமய நம்பிக்கைகள், மொழி, உணவு, உடைகள் போன்றவற்றால் மக்கள் வேறுபடுகின்றனர். இருப்பினும் இந்தியர் தேசிய உணர்வினால் ஒன்றுபடுகின்றனர். மனிதநேயம், சமயஉணர்வு, சகோதரத்துவம், நட்பு, சகிப்புத்தன்மை போன்றவை இந்தியர்களை ஒருமைப்பாட்டுடன் வாழச் செய்கின்றன. தேசியசின்னங்கள், தேசியக்கொடி மற்றும் தேசியகீதம் போன்றவை தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கின்றன. **'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு'** என்ற உணர்வு இந்தியஒருமைப்பாட்டிற்குவலிமைசேர்க்கிறது. இந்த உணர்வுதான் ஆங்கிலேயரிடமிருந்து நாம் விடுதலை பெறக் காரணமாக அமைந்தது எனலாம்.

# பயிற்சி

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. உலக நாடுகளின் பரப்பளவில் ஏழாவது பெரிய நாடு

   அ) இந்தியா  ஆ) சீனா  இ) அமெரிக்கா  ஈ) ரஷ்யா

2. பொருத்துக.

   அ. தமிழ்நாடு – 1) பருத்தி  ஆ. குஜராத் – 2) நெல்

   இ. கர்நாடகா – 3) தேயிலை  ஈ. அஸ்ஸாம் – 4) காபி

   அ) அ–2, ஆ–1, இ–4, ஈ–3  ஆ) அ–3, ஆ–4, இ–1, ஈ–2

   இ) அ–4, ஆ–1, இ–2, ஈ–3  ஈ) அ–3, ஆ–1, இ–4, ஈ–2

3. பின்வரும் கூற்றையும் அதன் காரணத்தையும் படித்து, விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

   கூற்று – 1 : பீடபூமிகள் என்பவை மழை குறைந்த உயர்நிலங்களாகும்.

   கூற்று – 2 : கனிம வளங்களும் சில வேளாண்பொருட்களும் இப்பகுதிகளில் விளைகின்றன.

   அ) கூற்று – 1 சரி, கூற்று – 2 தவறு  ஆ) கூற்று – 1 தவறு, கூற்று – 2 சரி

   இ) கூற்று – 1, கூற்று – 2 இரண்டும் சரி  ஈ) கூற்று – 1, கூற்று – 2 இரண்டும் தவறு

4. சரியாகப் பொருந்தியுள்ளவற்றைத் தேர்ந்தெடுக்க.

   அ) அஸ்ஸாம் – மங்கோலிய இனம்

   ஆ) மராட்டியப் பகுதி – ஆரிய திராவிட இனம்

   இ) வங்கதேசம் – இரானிய இனம்

   ஈ) காஷ்மீர் – துருக்கிய இனம்

5. பின்வரும் கூற்றுகளில் சரியானவற்றைத் தேர்ந்தெடுக்க.

   அ) கிரேக்கர்கள் முதன்முதலில் அறிந்த பகுதி, கங்கைப் பகுதியாகும்.

   ஆ) கிரேக்கர்கள் இந்தியாவை இந்துஸ்தான் என்றழைத்தனர்.

   இ) கிரேக்கர்கள் சிந்துவெளிப் பகுதியில் தமது பேரரசை உருவாக்கினர்.

   ஈ) கிரேக்கர்கள் முதன்முதலில் அறிந்தது சிந்துநதி பாயும் பகுதியாகும்.

6. பொருத்துக.

   அ) பஞ்சாப் – ஓணம்

   ஆ) தமிழ்நாடு – போஹாலி பிஹு

   இ) கேரளா – பைசாகி

   ஈ) அஸ்ஸாம் – பொங்கல்

7. இந்திய அரசியலமைப்புச் சட்டம் அங்கீகரித்துள்ள மொழிகளின் எண்ணிக்கை

   அ) 17  ஆ) 20  இ) 22  ஈ) 19

TNPSC_PRE_COACHING

8. பொருந்தாத இணையைச் சுட்டுக.

அ) கிழக்குத் திராவிட மொழி - கதபா
ஆ) நடுத்திராவிட மொழி - தெலுங்கு
இ) வட திராவிடமொழி - குரூக்
ஈ) தென்திராவிட மொழி - தமிழ்

9. இந்திய தேசிய மரமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதைத் தேர்ந்தெடுக்க.

அ) பனைமரம்
ஆ) ஆலமரம்
இ) தென்னைமரம்
ஈ) அரசமரம்

10. தவறான கூற்றைச் சுட்டிக்காட்டுக.

அ) அக்டோபர் 2ஆம் நாள், காந்திஜெயந்தி விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

ஆ) நவம்பர் 14ஆம் நாள் குழந்தைகள் தின விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

இ) அக்டோபர் 5ஆம் நாள் ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

ஈ) ஜனவரி 12ஆம் நாள் தேசிய இளைஞர் தின விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

TELEGRAM : TNPSC PRE COACHING